# செம்மணி

நிலம் 3 துகள் 126 வள்ளுவர் ஆண்டு 2052, 17 - 23 மார்கழி 2022 வாரமலர் பக்கங்கள் 29


# தப்பி ஓடிய 16 ஆயிரம் படையினரையும் கழற்றி விடுகிறது இலங்கை தரைப்படை

இலங்கை அரசு தனது படைகளுக்கு பாதீட்டில் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ள நிலையில், பன்னாட்டு நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக 16 ஆயிரம் தரைப் படையினரை கழற்றிவிடுவதாக அறிவித்துள்ளது. அவர்கள் அனைவரும் ஏற்கனவே தரைப் படையிலிருந்து தப்பியோடியவர்கள்.

நாடாளுமன்றத்தில் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டை முன்வைத்துப் பேசிய அரச தலைவரும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க,

பக்கம் 02



# குளிரால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

*அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற முன்முயற்சி*

வடக்கில் அண்மையில் ஏற்பட்ட கடும் குளிரினால் உயிரிழந்த மாடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் வசீகரன் தெரிவித்தார். கடும் குளிரைத் தாங்கக்கூடிய அளவிற்கு மாடுகளின் உடலில் கொழுப்புப் படிவு இல்லாததே அவை இறந்தமைக்கான காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

'மாண்டாஸ்' புயலின்போது வடக்கு கிழக்கில் காணப்பட்ட கடும் குளிரினால் இரு மாகாணங்களிலும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துபோயின. வடக்கில் மட்டும் ஆயிரத்து 83 மாடுகளும் 590 ஆடுகளும் உயிரிழந்தன. திடீரென ஏற்பட்ட இந்த இழப்புக்களால் வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு

பக்கம் 19

## ஷாப்டர் கொலை தொடர்பில்

# கிரிக்கெட் வர்ணனையாளர் விசாரணை வளையத்துள்

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரபல வர்த்தகருமான தினேஸ் ஷாப்டர் படுகொலை தொடர்பில் முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளரான பிரையன் தோமஸ் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளார். அவர் நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதற்கான தடை உத்தரவை காவல்துறையினர் கொழும்பு நீதிவான் மன்றத்தில் பெற்றுள்ளனர். ஷாப்டர் கொலை தொடர்பான விசாரணைகளை குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) தீவிரப்படுத்தியுள்ளது.

ஷாப்டர் கொழும்பு பொரளையில் உள்ள கனத்தை மயானத்தில் தனது காரில் தாக்கப்பட்டு கைகள் கட்டப்பட்ட நிலையில் வியாழக்கிழமை மாலை மீட்கப்பட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை

பக்கம் 03

# 200 கிலோ போதைப் பொருள் கடலில் சிக்கியது



தென் கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது சுமார் 200 கிலோ ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் 2 மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் இன்று (16) தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படை, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட ரோந்தின் போதே இந்த போதைப் பொருட்களைக் கைப்பற்றியதாக கடற்படையினர் கூறியுள்ளனர்.

இந்த இரண்டு படகுகளும் தெய்வேந்திரமுனைக்கு அப்பால், கடலில் பயணித்துக் கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.இதன்போது படகில் இருந்து கைது செய்யப்பட்டவர்கள் இலங்கைகச் சேர்ந்தவர்கள் என்றும் நம்பப்படுகிறது.

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# நியாயமான சந்தேகங்களை புறந்தள்ளிவிட முடியாது

கடந்த சில வாரங்களாக போதைப்பொருள் பயன்பாடு தொடர்பில் நாடு முழுவதன் கவனமும் ஈர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்திருப்பதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பெரு மெடுப்பில் மேற்கொள்ளப்படுவதாகவும் ஆட்சியாளர்கள் சார்பில் ஊடகங்களுக்குத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன. அதனடிப்படையில் கல்வி நிலையங்களில் காவல்துறையினரின் சோதனைகள், அவற்றைச் சுற்றி படையினரின் காவல் என்று படைத்துறை நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் எதிர்காலச் சந்ததியைப் பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று மக்கள் நம்ப வைக்கப்படுகின்றார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பானது என்பதால் இந்த நடவடிக்கைகள் குறித்து எவரும் கேள்வி எழுப்பவில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

போதைப்பொருள் பயன்பாடு முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலும் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த மோசமான சூழலில் இருந்து பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலும் செம்மண் பத்திரிகையும் உறுதியாக இருக்கின்றது. இது தொடர்பில் கடந்த இரண்டு வருடங்களாகவே நாம் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்தும் வருகின்றோம். யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் புள்ளி கைதுசெய்யப்பட்டது, அதன் பின்னணி, குருநகரில் நடந்த கொலையுடன் தொடர்புபட்டவர்களுக்கு இருந்த போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டுப் பின்னணி, மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்ற சதி என்பன குறித்தெல்லாம் செம்மண் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வந்திருக்கின்றது.

போதைப் பயன்பாடு முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் செம்மண் உறுதியாக இருக்கின்றது. அது வெறும் கஞ்சா, ஹெரோயின், அபின், ஐஸ் என்பனவாக மட்டுமல்லாது புகைப் பொருள்கள் மற்றும் மதுபானங்களும் ஒழிக்கப்படவேண்டும் என்பதே செம்மண்ணின் உறுதியான நிலைப்பாடு. மனிதனின் தன்னிலையை மறக்கச் செய்யும் எந்தவகைப் போதையும் அவனுக்குக் கெடுதலே என்கிற வகையில் இந்த அனைத்துப் போதைப் பொருள்களும் ஒழிக்கப்பட வேண்டும்.

இருப்பினும் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ள போதைப் பொருள் பயன்பாட்டுக்கு எதிரான ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் குறித்து நியாயமான சந்தேகங்களையும் செம்மண் எழுப்ப முனைகின்றது. போதைப்



# பாலியல் லஞ்சத்துக்கு எதிராகப் புதிய சட்டம்

## விரைவில் கொண்டு வர முடிவு

பாலியல் லஞ்சம் கோருவதை ஒரு குற்றவியல் குற்றமாக்கும் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. பாலியல் துன்புறுத்தல் சட்டங்களை வலுப்படுத்தும் அதே வேளை புதிய சட்டத்தையும் கொண்டுவரவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து வகையான பாலியல் துன்புறுத்தல்களையும் குற்ற வகைப்படுத்துவதற்கும் பாலியல் லஞ்சம் கோருபவர்களுக்குத் தண்டனை வழங்கும் வகையிலும் நீதி அமைச்சரால் முன்மொழியப்பட்ட சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய சட்ட வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது வரையில் பாலியல் லஞ்சம் கேட்பது ஒரு குற்றவியல் குற்றமாக வகைப்படுத்தப்படவில்லை. இருப்பினும் பாலியல் குற்றம் தொடர்பான முறைப்பாடுகள் குறைவாகவே பதிவு செய்யப்படுகின்றன என்று காவல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்படுபவர்கள் ஒதுக்கப்படும் நிலையே இவ்வாறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்படாமல் இருப்பதற்கான காரணம் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

## தப்பி ஓடிய...

படைகளுக்கான செலவைக் குறைக்கும் வகையில் படையினர் முன்கூட்டியே ஓய்வுபெறும் திட்டத்தை அறிவித்தார். வெவ்வேறு திறமைகளையுடைய படையினர் அந்தத் திறமைகளைத் தமது ஓய்வுக்குப் பின்னர் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்க முடியும் என்கிற நோக்கத்துடனும் இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து படைகளில் இருந்து தப்பியோடியவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. கார்த்திகை 15ஆம் நாள் முதல் மார்கழி 31ஆம் நாள் வரையில் பொதுமன்னிப்புக் காலம் என்றும் அறிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை வரையில் தரைப் படையைச் சேர்ந்த 16 ஆயிரத்து 141 பேர் பொதுமன்னிப்பெற விண்ணப்பித்துள்ளனர் என்று தரைப் படைப் பேச்சாளர் ரவி கேரத் தெரிவித்தார். இவர்களில் 21 பேர் அதிகாரிகள். 15 ஆயிரத்து 838 படையினருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவர்கள் அனைவருக்கும் அவர்கள் படையில் இருந்து விலக்கப்பட்டதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். மேலும் 179 பேர் பொதுமன்னிப்புக் கேட்டு அவர்களது படையணிகளுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் தொடர்பான அனுமதி கிடைத்ததும் அவர்களும் படைகளில் இருந்து விலக்கப்பட்டு விடுவிக்கப்படுவார்கள் என்றும் கேரத் தெரிவித்தார்.

வான் படையைச் சேர்ந்த 983 பேர் பொதுமன்னிப்புக்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்றும் அவர்களில் 732 பேருக்கு அது வழங்கப்பட்டுள்ளது என்றும் வான்படைப் பேச்சாளர் குரூப் கப்டன் துசாந்த விஜேசிங்க தெரிவித்தார்.

விடுமுறைக்காக வீடுகளுக்குச் செல்லும் படையினர் கடமைக்குத் திரும்பவில்லை என்றால் அவர்களின் சம்பளம் மற்றும் சலுகைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படும். எனவே படைகளில் இருந்து ஏற்கனவே தப்பியோடியவர்களை விலக்குவதன் மூலம் படைத்துறைக்கான செலவினம் கட்டுப்படுத்தப்படாது என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொருள் பயன்பாடு இன்று நேற்று திடீரென அதிகரித்த ஒன்றல்ல. போருக்குப் பின்னரான காலத்தில் தொடர்ச்சியாகக் கிரமமாக அது அதிகரித்து வந்திருக்கின்றது. அது குறித்து ஊடகங்களும் சமூக ஆர்வலர்களும் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றனர். ஆனால் அப்போதெல்லாம் ஆட்சியாளர்கள் அது குறித்து மெத்தனமாகவே நடந்து வந்திருக்கின்றனர்.

மக்கள் எழுச்சி ஒன்று ஏற்பட்டு ஆட்சி மாற்றம் நிகழ்த்தப்பட்ட பின்னணியில் அதிலும் பல்கலைக் கழக மாணவர்கள் இந்த எழுச்சியின் அடிநாதமாகச் செயற்பட்ட பின்னணியில் இப்போது மாணவர்கள் போதைப் பயன்பாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்கிற பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்களைச் சுற்றி படையினர் நிறுத்தப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது எதற்காக? இதன் பின்னணியில் வேறு நோக்கங்கள் இருக்கின்றனவா?

பொருளாதார மீட்சிக்கு வழியும் உதவியும் அற்றுத் திண்டாடும் ஆட்சியாளர்கள் மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சி ஏற்படுவதையும் அதற்கு மாணவர்கள் உறுதுணையாக நிற்பதையும் தடுப்பதற்காகவே அவர்கள் போதைக்கு அடிமையாகிறார்கள் என்கிற பரப்புரையையும் அவர்கள் மீதான மேற்கொள்கின்றதா?

யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன், போதைப் பொருள் கடத்தலுடன் படையினருக்கும் காவல் துறையினருக்கும் தொடர்புகள் இருப்பதாகத் தெரிவித்திருந்தார். அதில் உண்மையும் உண்டென்பதை நீதிமன்றங்களினால் இந்தக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட படையினரின் எண்ணிக்கையில் இருந்தே தெரிந்துகொள்ளவும் முடியும். அப்படியிருக்கும்போது அதே படையினரை வைத்து போதைப் பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் உண்மையான பின்னணி போதைப் பொருள் பாவனைக் கட்டுப்பாடா? மாணவர்களின் எழுச்சியை கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதா?

மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதிலும் தனது ஆட்சி கவிழ்க்கப்படாமல் இருப்பதிலும் மிக அவதானமாக இருக்கும் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியால் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் மீது இந்தச் சந்தேகங்கள் எழுவது நியாயமானதே! இந்த விடயத்தில் அத்தகைய கெடு நோக்கம் நிறைவேற்றப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும் உண்மையான நோக்கத்தை நோக்கி இந்த நடவடிக்கைகளை வழிப்படுத்துவதும் சமூக நலன் விரும்பிகளதும், அக்கறையுள்ளவர்களதும், நேர்மையான அரசியல்வாதிகளதும் கடமையாகும்.





## கிரிகெட்...

பெற்று வந்த நிலையில் மாரடைப்புக் காரணமாக அவர் உயிரிழந்தார்.

வீட்டைவிட்டு ஷாப்டர் புறப்பட்டுச் சென்ற பின்னர் அவருடன் செல்பேசியில் தொடர்புகொள்ள முடியாத நிலையை அடுத்து நண்பர்களின் உதவியை நாடியுள்ளார் அவரது மனைவி. இறுதியில் அவரது செல்பேசி பொரளை, கனத்தை மாயானத்தில் இருப்பதாக அடையாளப்படுத்துவதை அறிந்து அங்கு சென்ற நண்பர்கள் கனத்தை காவலாளியின் உதவியுடன் அவரை காரில் இருந்து இறக்கி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

ஷாப்டர் தாக்கப்பட்டு கைகள் கட்டப்பட்டிருந்த என்றும் ரிவி கேபிள் கொண்டு அவரது கழுத்து நெரிக்கப்பட்டிருந்தது என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர். ஷாப்டரின் காரை அங்கு நிறுத்திவிட்டு உயரமான ஒருவர் நடந்து சென்றதைக் காவலாளி கண்டுள்ளார் என்றும் அதிகாரிகள் கூறினர்.

ஷாப்டரின் கொலைக்கான காரணம் உறுதியாகத் தெரியவராதபோதும் முன்னாள் கிரிக்கெட் வர்ணணையாளரான பிரையன் தோமஸ் தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளைத் தொடக்கியுள்ளனர். தோமஸ் 140 மில்லியன் ரூபாயை ஷாப்டரிடம் கடனாகப் பெற்றுக்கொண்டு அதனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று 2019ஆம் ஆண்டு காவல்துறையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொலையாவதற்கு முன்பாகத் தனது கணவர் தோமஸை சந்திக்கச் செல்லப்போகிறார் என்று தன்னிடம் தெரிவித்திருந்தார் என்று ஷாப்டரின் மனைவி காவல்துறையினரிடம் தெரிவித்திருந்தார். அன்றைய நிகழ்ச்சி நிரலில் தோமஸின் சந்திப்பும் நிரலிடப்பட்டிருந்தது என்று ஷாப்டரின் தனிப்பட்ட செயலாளரும் காவல்துறையினரிடம் கூறியிருக்கிறார்.

இந்த நிலையில் தோமஸ் நாட்டைவிட்டு வெளியேறாமல் இருப்பதற்கான நீதிமன்றத் தடையுத்தரவைக் காவல்துறையினர் பெற்றுள்ளனர். ஷாப்டரின் கொலை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கத்தினர் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கொலையைத் தொடர்ந்து காவல் மா அதிபர் உள்ளிட்ட காவல்துறையினர் உயர் அதிகாரிகளை வெள்ளிக்கிழமை சந்தித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், கொலைகள் தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பணித்தார்.

# அரசியல் பூச்சியம்

விதுரன்



இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் பற்றி ஆலோசிப்பதற்காக அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்று கடந்த 13ஆம் திகதியன்று கூட்டப்பட்டது. இதில் கலந்துகொண்ட பலரும் பல்வேறு விதமான கருத்துகளை முன்வைத்தார்கள். அவற்றில் பேச்சுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளடங்கியிருந்தது. இந்தக் கூட்டத்தில் பேசிய சம்பந்தன், காணாமல் ஆக்கப்பட்ட அனைவரையும் கொன்றுவிட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். அதற்கான பன்னாட்டு விசாரணைகளுடன் கூடிய உண்மை வெளிப்படுத்தலை எதிர்பார்க்கிறோம் என்றார்.

**மாசி 4ஆம் நாளுக்கு முன்**

2023ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதியன்று இலங்கை பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுபட்ட தினத்தைக் கொண்டாடவிருக்கிறது. இந்த நிலையில் அதற்கு முன்னதாக மேற்கொள்ளக்கூடிய சாதகமான விடயங்கள் என்ன என்று அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இன்னும் 2 மாதங்கள் மாத்திரம் உள்ள நிலையில் எல்லா வரங்களையும் கேட்பதைக் கைவிட்டு நல்லிணக்க முயற்சியாக அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும் என்ற ஒரு விடயத்துடன் முடித்திருக்க வேண்டிய சம்பந்தன் காணாமற்போன எல்லோரையும் கொன்றுவிட்டீர்கள் எனக் குறிப்பிட்டதன் மூலம் சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழருக்குச் சாதகமாக எதுவும் நடக்காதவாறு பெரிய தடைக்கல்லை உருட்டி விட்டிருக்கிறார். இந்த இரண்டு மாத காலத்துக்குள் அரசியல் கைதிகளை விடுவித்தால்கூட அதை ஓர் அடைவாகக் காட்டியிருக்க முடியும்.



**டேவிட் கமரூன் யாழ்ப்பாணம் வந்தபோது**

2013ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ஆம் நாளன்று பிரித்தானியாவின் அப்போதைய தலைமை அமைச்சர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். தற்காலிக முகாம்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களைச் சந்தித்து உரையாடினார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவருடனிருந்தார். பின்னர் யாழ்ப்பாண நூலகத்துக்குச் சென்ற கமரூனைச் சந்திப்பதற்காகக் காணாமல் ஆக்கப்பட்டவர்

களின் உறவுகள் பதாதைகளை ஏந்தியவாறு அங்கு காத்திருந்தார்கள். நூல் நிலையத்தில் கமரூன் கலந்து கொண்ட கூட்டம் முடிந்த பின் கமரூன் தம்மைச் சந்திப்பார் என எதிர்பார்த்து அவருடன் தமது விடயத்தைப் பேசக் காத்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

நூலகக் கூட்டம் முடிந்ததும் பின்வாசலால் டேவிட் கமரூனை வெளியேற்றியதில் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருக்கு முக்கிய பங்கிருந்தது. ராஜபக்சாக் களைக் காப்பாற்றும் நோக்கமே அப்போது சம்பந்தனுக்கு இருந்தது. அவர் மக்கள் பக்கம் நின்றிருந்தால் மக்களின் காலடிக்கு வந்த கமரூனைச் சந்திக்க வைத்து மகிந்த அரசுக்குப் பன்னாட்டு அளவில் நெருக்கடியைக் கொடுத்திருக்க முடியும். அந்த வாய்ப்பை இல்லாது செய்த சம்பந்தன் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நல்லெண்ண முன்னெடுப்புகள் பற்றிப் பேச வேண்டியதைத் தவிர்த்துத் தான் ஒரு துணிந்த தமிழ்த் தலைவர் என்று காட்ட நினைத்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கொன்றுவிட்டீர்கள் என்று கூறும் சம்பந்தன் 2013இல் டேவிட் கமரூன் வந்தபோது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருந்தார்கள் என்று கூற முற்படுகிறரா....? அப்படியாயின் அவர்கள் கொலை செய்யப்பட்ட செய்தியை அறிந்ததும் பன்னாட்டுகளுக்கு வெளிப்படையாக அதைச் சம்பந்தன் ஏன் அறிவிக்கவில்லை...?



**சிங்களவரைச் சீண்டுவதன் மூலம் தம்மைத் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதாகக் காட்டும் தமிழ் அரசுக் கட்சியின் பூர்வீக அணுகுமுறையிலேயே சம்பந்தன் தற்போதும் இருக்கிறார்**

### முஸ்லிம்களின் நிலைப்பாடு

வடக்குக் கிழக்கு இணைப்பு விடயத்தில் முக்கிய முட்டுக் கட்டையாக இருக்கப்போவது முஸ்லிம்களே. 1987இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானபோது வடக்குக் கிழக்கில் காணப்பட்ட சூழல் தற்போது இல்லை. தமிழ் மக்களின் தொகை குறைந்து வரும் நிலையில் தந்திரமாக எதைப் பேசவேண்டும் என்பதில் சம்பந்தன் போன்ற மூத்த தலைவர்களுக்கே விவேகம் இல்லை என்றால், இனிவரப் போகும் நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழர்கள் இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சமஷ்டி நிர்வாகத்தைக் கோரும் நிலையில் முஸ்லிம்கள் வடக்கும் கிழக்கும் இணைக்கப் படக்கூடாது என்ற கருத்தை அதேகூட்டத்தில் முன்வைத்திருக்கிறார்கள்.

### தோல்வியும் வெற்றியும்

அரசியல் கைதிகள் விடயம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயம், காணி கையகப்படுத்தல் போன்ற பல விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிழையான அணுகுமுறைகளே அவர்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தியது. 2020 தேர்தலில் பலர் தோற்றும் சிலருக்கு அரும்பொட்டு வெற்றிகளும் கிட்டின. 147 வாக்குகளால் தலைவர் சம்பந்தன் வென்றார். தமிழர் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை சிங்களத் தலைவர்களை ஒன்றுசேர்ந்து முன்வைக்குமாறும் அதை நாம் பரிசீலித்து முடிவெடுப்போம் என்றும் ஒரு வசனத்தில் முடிக்கவேண்டிய விடயத்தை மேலும் சிக்கலுக்குள் தள்ளியிருக்கிறார் சம்பந்தன்.

சிங்களவரைச் சீண்டுவதன் மூலம் தம்மைத் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதாகக் காட்டும் தமிழ் அரசுக் கட்சியின் பூர்வீக அணுகுமுறையிலேயே சம்பந்தன் தற்போதும் இருக்கிறார். இது அரசியலில் பூச்சியப் பெறுமானத்தையே அவர் சம்பாதித்திருப்பதைக் காட்டுகிறது.

சிறைக்குள்... 87

# ரவிராஜ்ஜும் சிவாஜிலிங்கமும்



தர்மராசா

**19.07.2002** அன்று களுத்துறைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு முன்னர் கைதிகளுடன் சமரசமாகப் பேசுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கமும், ரவிராஜ்ஜூம் **17.07.2002** அன்று களுத்துறைச் சிறைச்சாலைக்கு வருகை தந்தார்கள். முதலில் 'டி' பிரிவுக்குப் போனவர்கள் பிற்பகலில் 'பி' பிரிவுக்கு வந்தார்கள். கைதிகள் மத்தியில் சிவாஜிலிங்கம் உரையாற்றினார்,

"அரசுக்குப் பல நெருக்கடிகள் உண்டு. புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் பல விடயங்களில் மாற்றம் வந்துள்ளது. வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணம் செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறத் தேவையில்லை. 6ஆயிரம் ரூபா செலவில் யாழ்ப்பாணம் போனவர்கள் ஆயிரம் ரூபா செலவில் இப்போது போக முடிகிறது. நேற்றுப் தலைமை அமைச்சர் ரணிலுடன் கதைத்தபோது இன்னும் 360 பேர் வரையில்தான் தமிழ் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களின் விசாரணை விரைவில் முடிக்கப்படும். பேச்சு தொடங்கிவிட்டால் அனைவரும் விடுதலை செய்யப்படுவர் என்று உறுதியளித்தார். ஆனால் பின்னர் அப்படி எதுவும் நடக்கவில்லை. புரெடக்சன் இல்லாத வழக்குகளைத் திரம்பப் பெறுமாறு கோரவிருக்கிறேன். பட்டினிப் போராட்டம் நடத்த உங்களுக்கு இருக்கும் உரிமையை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்தச் சூழலில் போராட்டம் நடந்தால் சிகள உறுமய, ஜே.வி.பி குழுக்களுக்கு பிரசாரத்துக்குத் தீனி கொடுத்ததுபோல் ஆகிவிடும். தொடர்ந்து உங்கள் விடுதலைக்கான அழுத்தத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக கொடுத்துக்கொண்டிருப்போம். இன்னும் கொஞ்ச நாள்கள் பொறுத்துக் கொள்ளுங்கோ" - என்றார்.

ரவிராஜ் பேசியபோது, "நானும் சிவாஜி அண்ணையும் தனித்தனியாகக் களுத்துறைக்கு வரவேண்டும் என்று முடிவெடுத்தோம். இங்கு வந்துதான் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தோம்" - என்றார். களுத்துறைச் சிறையில் நீண்ட காலமாக இருக்கும் கைதி ஒருவர் அருகிலிருந்தவர்களிடம், "விட்டுட்டான்டா

# என்னையும் நாயையும் பாதுகாக்கத் தனிப் படை

02

மொழியாக்கம்
கமலநாதன்





(சென்ற வாரத் தொடர்ச்சி)

நான் நாயை வைத்து எதிரிகளின் நிலமையை அவதானிப்பதால் என்னைச் சுற்றியிருக்கிற அந்தச் சூழலில் என்ன நடக்கிறது என்பதை அவதானிக்க எனக்கு அவகாசம் இருப்பதில்லை. எதிரி எங்காவது மறைந்திருந்து என் மீதும் நாய் மீதும் தாக்குதல் நடத்த வாய்ப்பிருக்கும். அதனால் எமது பாதுகாப்புக்கெனக் கொமாண்டோ அணி ஒன்று களத்தில் இறக்கப்பட்டது.

**கதிர்காம வீதியில் புலிகள்**

கதிர்காமம் முதன்மை வீதிக்கு அருகிலுள்ள காடுகளில் (பகுதி2 காட்டுப்பகுதி) புலிகளின் நடமாட்டம் இருப்பதாகக் குறிப்பிட்டு அங்குள்ள 8 பகுதிகளை வேவுப் பிரிவினர் அடையாளம் காட்டினர். எமது அணியினர் அங்கு வேவு பார்ப்பதில் 2 நாள்களைச் செலவிட்டனர். பின்னர் புலிகள் வெளியேறிச் செல்லும் இடத்தையும் நாம் வெளியேறும் இடத்தையும் உறுதி

மச்சான்...! எங்களுக்கும் எங்கட நிழலுக்கும்'' - என்றார்.

ரவிராஜ் அன்றுதான் தான் முதல் தடவை களுத்துறைச் சிறைச்சாலைக்கு வந்திருக்கிறேன் என்று கூறினார். 'டி' பிரிவில் ஆத்திரப்பட்டுக் கைதிகள் அவரைப் பேசிவிட்டார்கள். அதனால் மனம் நொந்துபோய் இருந்தார். ஒரு மேடைப் பேச்சையே பேசினார். வழமையாகச் சொல்வதைத்தான் சொல்லப்போகிறார்கள் என்ற பக்குவ நிலையில் ரவிராஜ், சிவாஜிலிங்கம் ஆகியோரைச் சந்திக்கும் ஒன்றுகூடலுக்கு முன்பு எமது பிரிவுக் கைதிகள் இருந்தார்கள். யாரும் முரண்பட வேண்டாம் என்றும் முடிவெடுத்துக் கொண்டார்கள்.

சிவாஜிலிங்கம், ரவிராஜ் இருவரும் களுத்துறைக் கைதிகளுக்குத் தங்கள் போதனைகளைச் செய்துவிட்டுத் திரும்பியதாக நினைத்தால் அது அவர்கள் அவர்களைப் பற்றிச் செய்துகொண்ட குறை மதிப்பீடாகவே இருக்க முடியும். சில கைதிகள் அவர்கள் வருவதை அறிந்து கூட்டம் நடந்த சாப்பாட்டு மண்டபப் பக்கமே வரவில்லை. சிலர் குளித்துக்கொண்டும் தூரத்திலிருந்து ஒன்றுகூடிக் கதைத்துக்கொண்டுமிருந்தார்கள்.

திட்டமிட்டபடி 19.7.2002 அன்று 'டி' வாட்டில் போராட்டம் தொடங்கியது. சுரேஷ் என்பவர் நீர்கூட அருந்தாமல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். 20ஆம் திகதி 'டி' பிரிவுக் கூரையில் பலர் ஏறி நிற்பதைக் கண்டேன். 21ஆம் திகதி 10 பேர் வரையில் 'பி' ஒன்று கூரையில் ஏறினார்கள். மறுநாள் எனக்கு வழக்குத் தவணை இருந்ததால் அதன் பின்பு இதில் கலந்து கொள்வது குறித்து முடிவு எடுக்கலாம் என்று நினைத்தேன்.

22.7.2002அன்று காலையில் 'பி' பிரிவிலும் 'டி' பிரிவிலும் உணவு தவிர்ப்பு இருந்தவர்கள் கூரை மீது மழையில் நனைந்தவாறு நின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் கையசைத்துவிட்டு நீதிமன்றத்துக்குச் செல்லவிருந்தவர்களுடன் நானும் புறப்பட்டுச் சென்றேன். அது நான் போய் வருகிறேன் என்று களுத்துறைச் சிறைச்சாலைக்கு அசைத்த கை என்பது அந்தக் காலையில் எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

நான் முதற்தடவையாகப் போகம்பரைச் சிறையில் அடைக்கப்பட்ட அன்றும் மழை பெய்துகொண்டிருந்தது. கைவிலங்குடன் நடந்து சென்றபோது கண்டியின் அழகை ரசிக்க முடியவில்லை. மழை பெய்யும் சூழலில் உடலும் மனமும் தீயாக எரிந்து கொண்டிருந்தன. எனினும் உணவு தவிர்ப்பு போராட்டம் இருந்த கைதிகளின் வயிறுகள் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்ததால் அந்த மழையையும் ரசிக்க முடியவில்லை.

(தொடரும்)

செய்தோம். புலிகள் இருக்கும் இடத்துக்கு அருகாக 100-150 மீற்றர் வரையில் புரூணை சென்று தரித்து நின்று அவர்கள் நிற்கும் இடத்தைக் கண்ணால் காட்டியது. அதன் பின்னர் அங்கிருந்த காலடிகளை அவதானித்தேன். காலடிகளை வைத்து அந்த நபர் வலது கைப் பழக்கமுள்ளவரா, இடது கைப் பழக்கமுள்ளவரா? என்பதைக் கூடக் கண்டறிய முடியும். வலது கைப் பழக்கமுள்ளவர் வலது காலை இறுக்கி மிதிக்கும் தன்மை உள்ளவராக இருப்பார். அந்தக் காலடி எத்தனை நாட்களுக்கு முன்னர் வைக்கப்பட்டது என்பது தொடக்கம் எத்தனை மணித்தியாலத்துக்கு முன்னர் வைக்கப்பட்டது என்பது வரை கண்டுபிடிக்க முடியும். பொதுவாகக் காட்டுக்குள் யானை, மான், பன்றிகளின் கால் அடையாளங்கள் அதிகம் இருக்கும். அதில் பன்றிகள் பள்ளமான தண்ணீர் ஓடிய பகுதிகளால் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்கும். இத்தகைய தாழ்வான பகுதிகளையே புலிகளின் படையணியும் தெரிவு செய்வது வழமை. அப்படிப்பட்ட இடங்களில் புல் மடிந்திருக்கும் திசையை வைத்து நடமாட்டங்களை அவதானிக்க முடியும். அதேவேளை புல் நுனியிலிருக்கும் பனித்துளியை வைத்தும் அவதானிப்புகளைச் செய்ய முடியும்.

புரூணை நின்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் சடலம் ஒன்றைக் கண்டுபிடித்தேன். அது பெண் புலிப் போராளி ஒருவரினுடையது. அந்தச் சடலத்தைத் தொட வேண்டாம் என்று கொமாண்டோக்களுக்கு அறிவுறுத்தினேன். அவதானமாகத் தேடிப் பார்த்தபோது புலிகள் தாம் தயாரித்த மிதிவெடிகள் 20 வரையில் சடலத்தைச் சுற்றிப் புதைத்திருந்தார்கள். அதில் ஒன்றில் கொமாண்டோ வீரர் ஒருவர் மிதித்து விட்டார். அதனால் தனது காலை இழந்தார்.

புரூணையிடம் அபாரத் திறமை இருந்தது. நான் நினைப்பதை விளங்கிச் செயற்படும் ஆற்றல் அதற்கிருந்தது. அதேவேளை சுனோவியும் அதிக திறமை வாய்ந்ததாக இருந்தது. அதனால் அந்த நாயை எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்வதில்லை. புரூணை என்னைத் தவிர வேறு நபர்களுடன் செல்ல விரும்பாது.

**நாய்களுக்குப் பயிற்சிகள்**

ஒரு நாயை அதன் இயல்பு நிலைக்கு மாறாகப் பயிற்சி மூலம் படைச் சிப்பாய்போல மாற்றவேண்டும். பயிற்சிக்கு 10 நாய்களை எடுத்தால் அதில் 5 நாய்களே எமது நோக்கத்துக்குச் சாதகமாக இருக்கும். அந்த 5 நாய்களில் ஒரு நாயையே சுனோவி, புரூணைபோல முழுமையான நிலைக்குப் பயிற்றுவிக்க முடியும். நாயைப் பயிற்றுவிக்கப் பொறுப்பெடுத்து 4 மாத இடைவெளியில் மாற்றங்களை ஏற்படுத்தாது விட்டால் எங்களது பதவிக்குப் பாதிப்பு ஏற்படும். வேறு யாராவது சாப்பாடு ஏதாவது கொடுத்தால் அதைச் சாப்பிடாது இருக்கப் பழக்குவது, நாம் கட்டளையிட்ட பின்னர் சாப்பிடப் பழக்குவது, வெடி மருந்துகளைத் தேடுவதற்கான மோப்பப் பயிற்சிகள், எங்காவது பிணம் கிடந்தால் தேடிக் கண்டுபிடிப்பது போன்ற பயிற்சிகளை வழங்கவேண்டும். அவை தொடர்பான பயிற்சிகளை இந்தியாவிலும் லெபனானிலும் பெற்றேன்.

நாங்கள் தேடவுள்ள விடயத்தில் கொடுக்கப்படும் மணத்தை நாய் மறக்காமல் நினைவில் வைத்திருக்கப் பழக்குதல், நாய்க்கு நல்ல உடல் பலம் இருப்பதை உறுதி செய்தல், எந்தச் சந்தர்ப்பத்திலும் குரைக்காது இருக்கவும், காட்டுக்குள் கொண்டுசெல்லும்போது காட்டு மிருகங்களைக் கண்டுவிட்டால் துரத்தாமல் இருக்கவும் பயிற்சி அளித்தல் என நாய்களுக்கான பயிற்சிகள் பலவிதம்.

**நாயைப் பயிற்றுவிக்கப் பொறுப்பெடுத்து 4 மாத இடைவெளியில் மாற்றங்களை ஏற்படுத்தாது விட்டால் எங்களது பதவிக்குப் பாதிப்பு ஏற்படும்**

புரூணை தான் படைச் சிப்பாய் என்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கும் பொறுப்பான நாய். 2007ஆம் ஆண்டு சுனோவிக்கு கம்பிளியாய பகுதியில் குண்டுச் சிதறல் ஒன்று பட்டுவிட்டது. பின்னர் பேராதனை மிருக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. எமது அணியிலும் மிருக வைத்தியர் ஒருவர் இணைக்கப்பட்டிருந்தார். அவர் எங்களுடன் சேர்ந்து படை நடவடிக்கைக்கு வருவார். அவரையும் படைச் சிப்பாயகவே நடத்தினர். அவர் இறந்தபோது படை மரியாதையுடன் அடக்கம் செய்தோம்.


சுனோவிக்குச் சத்தத்தின் அதிர்வலைகளைத் துல்லியமாக அறியும் சக்தி இருந்தது. புரூணை போர் முடிந்தபின் வேறு நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த நாய்களுக்கு ஓய்வுபெறக் காலமிருந்தது. வெடி மருந்துகளை மோப்பம் பிடிக்கும் நாய்களுக்கு நீரிழிவு நோய் விரைவில் ஏற்படுவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு நோய் ஏற்பட்டபின் மருந்து, உணவு, ஓய்வு எனக் காலத்தைக் கழிக்கும்.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரான பணி**

2019இல் நடந்த உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதலின் பின்னர் சாய்ந்தமருதுப் பகுதியில் நாய்களுடன் தேடுதலில் இறங்கினோம். கே9 குறூப் என்பது உலகம் முழுதுமுள்ள நாய்ப் படையணி. தற்போது ரோபி என்ற தனிப்பட்ட நாய் ஒன்று என்னுடன் உள்ளது. நான் ஆயிரம் நாய்களுக்கு மேல் பயிற்சி கொடுத்ததால் இது விடயத்தில் சிறப்பு ஞானம் எனக்குண்டு. நாயின் தன்மைகளையும் திறமைகளையும் அறிந்து பயிற்சி அளிக்க வேண்டும். தற்போது விடுதிகளில் சிறப்புப் பாதுகாப்புக்காக ரோபியுடன் சென்று வருகிறேன். அங்கு தங்கும் சிறப்பு அதிதிகள் அங்கிருந்து வெளியேறும்போது ரோபியின் தலையைத் தடவிப்போவார்கள். அவர்களின் உயிரைப் பாதுகாத்த திருப்தி எனக்கும் நாய்க்கும் இருக்கும்.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப்பகத்தால் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தியாயத்தைச் செம்மண்ணில் வாசிக்கத் தருகிறோம்.




03

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

டொனமூர் யாப்பின் கீழ்க் கரையோரச் சிங்கள - கண்டிச் சிங்கள இணைப்பு அகப்புறக் காரணிகளால் வளர்ச்சியடைந்து சென்றது. இக்காலத்தில் சிங்கள - தமிழ் முரண்பாடு அதிகம் கூர்மையடையத் தொடங்கியது. கரையோர-கண்டிச் சிங்களவருக்குத் தமிழர் பொது எதிரி என்ற நிலை வளரலாயிற்று. கரையோரச் சிங்களத் தலைவர்கள் கண்டிச் சிங்கள உயர் குழாத்தில் பெண்ணெடுக்கும் திருமண உறவுகள் வாயிலாக கண்டி-கரையோர ஐக்கியத்துக்கான உளவியல் தளமும் திட்டமிட்டு வளர்க்கப்படலாயிற்று. உதாரணமாக டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா போன்ற கரையோரத் தலைவர்கள் கண்டியில் அரசியல் மணம் புரிந்தனர். பௌத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்பது கண்டிய உயர் குழாத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாய் அமைந்தது. மல்வத்த, அஸ்கிரிய பீடங்கள் கண்டியைத் தளமாகக் கொண்டிருந்ததால் மத ரீதியான மதிப்புக்குரிய முக்கியத்துவம் கண்டியர்களைப் பிரதேச அரசியலுக்கு வெளியே தீவு தழுவிய அரசியலுடன் ஒட்டியது.

அரசியல்-தலைமை பெரிதும் கரையோரச் சிங்களவர்களின் கையிலிருந்தது. மதத்தலைமை பெரிதும் கண்டிச் சிங்களவர் கைகளிலிருந்தது. கண்டிச் சிங்கள உயர் குழாத்தினர் வணக்கத்துக்கும் மதிப்புக்குமுரிய மதத் தலைமையுடன்

# பிரபாகரனின் பாதையைக் காக்கத் தவறிய தமிழ் அரசியல்வாதிகள்

நியூட்டன்

"முன்னாள் படைத்தளபதியான காமல் குணரட்ண எழுதிய நந்திக் கடலுக்கான பாதை என்ற நூலில் போர் முடிந்தபோது லட்சக்கணக்கான ஒளிப்படங்களைப் புலிகளிடமிருந்து கைப்பற்றினோம். அவற்றில் ஒன்றில்கூட பிரபாகரன் புகைபிடிக்கும் படமோ மது அருந்தும் படமோ இருக்கவில்லை" என்றுள்ளார். எஸ்.பி. திசாநாயக்கா பேசும் போது பிரபாகரன் ஒழுக்கமுள்ள ஒரு தலைவர் என்று குறிப்பிட்டார் என்று அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நாடாளுமன்ற உரை ஒன்றில் குறிப்பிட்டார்.

எதிரிகளே புகழும் தலைவராகப் பிரபாகரன் இருக்கும்போது தமிழ்த் தேசியம் பேசும் தலைவர்கள் இளம் சந்ததிக்குப் பிரபாகரன் பற்றி எதைக் கூறி வருகிறார்கள் என்பதே இன்றுள்ள கேள்வி. பிரபாகரன் எதை நினைத்தார்? எதைச் செய்தார்? நாம் எதைச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் இவர்கள் எப்படி அணுகுகிறார்கள் என்று புரியவில்லை.

**வடக்கு கிழக்கில் அதிக மதுபானசாலைகள்**

பிரபாகரன் மது அருந்தவில்லை என்ற செய்தியைத் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களிடம் இறுக்கமாக்கியிருந்தால் வடக்குக் கிழக்கில் மதுப்பாவனை தலைவிரித்தாடியிருக்காது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்குப் பினாமிப் பெயர்களில் மதுக்கடைகள் இருப்பதால் இது விடயத்தில் முதல் தவறைச் செய்தவர்கள் அவர்களே.

**காடு வளர்ப்பு**

புலிகளால் காடுகள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டன என்ற செய்தியை முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால ஒரு தடவை வியந்து பாராட்டினார். போர் முடிவுற்றதும் அத்தகைய காடுகளை வெட்டி வீழ்த்தப் பலரும் களமிறங்கினர். தமிழ் அரசியல்வாதிகள் பலர் தமது கட்சித் தொண்டர்கள் காடுகளை அழிக்க உடந்தையாகஇருந்தனர்.



இலகுவில் திருப்தியடைந்து படிப்படியாகத் தமது பிரதேசவாதத்தைத் தணிக்கும் நிலை வளர்ந்தது. வீதி, புகையிரத வீதி மற்றும் போக்குவரத்துகள், வர்த்தகம் ஏனைய பொருளாதார நடடவடிக்கைகள், கலாசார பரிவர்த்தனைகள், தபால் தொலைத்தொடர்புகள், பத்திரிகை, வானொலி போன்றன வாயிலாக கண்டியும் கரையோரமும் விரைவான இணைப்புக்குள்ளாகி ஒன்றின் மீது ஒன்று தங்கி நிற்கும் நிலையும் வளர்ந்து. கண்டி-கரையோர ஐக்கியம் விரைவாக நிகழ்ந்தது.. இவற்றுடன் கரையோரச் சிங்களத் தலைவர்கள் கண்டிச் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய பல அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தனர். குறிப்பாக மலையகத் தமிழரின் வாக்குரிமை, குடியுரிமை என்பவற்றை டி.எஸ்.சேனநாயக்கா பறித்தமையானது கண்டிச் சிங்களவர்க்குக் கரையோரச் சிங்களவர் மீது நம்பிக்கைகளை வளர்க்க உதவியது. இதில் டி.எஸ்.சேனநாயக்கா தொழிலாளர் வர்க்கத்தைப் பலவீனப்படுத்தியமை ஒருபுறமிருக்க கண்டிச் சிங்களவரைத் திருப்திப்படுத்தி கண்டி-கரையோர ஐக்கியத்தை ஏற்படுத்தியமை போன்ற பல வெற்றிகளை ஈட்டினார்.

இவ்வாறாகக் கரையோரச் சிங்களவர்களின் பலம் இன்றியமையாதது என்ற உணர்வு கண்டிச் சிங்கள மக்கள் மத்தியில் வளரவே அவர்கள் சமஷ்டிக் கோரிக்கையிலிருந்து தம்மை முழுவதும் விடுவித்துக்கொண்டனர். இப்படி 1949ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா மலையகத் தமிழர் மீது மேற்கொண்ட சட்ட சவுக்கினாலான தாக்குதல்களைத் தொடர்ந்து சமஷ்டிக் கோரிக்கை பற்றிய சிந்தனை கண்டியர் மத்தியில் முற்றிலும் மறைந்துவிட்டது.

அதாவது இனிமேல் கண்டியர் மத்தியில் ஒருபோதும் சமஷ்டிக் கோரிக்கை எழ இடமேயில்லை என்ற நிலை பரிபூரணமாகி விட்டதெனலாம். கண்டிச் சிங்களவர் மத்தியில் முதலில் சமஷ்டிக் கோரிக்கை எழுந்து, பின்பு கரையோரச் சிங்களவரான பண்டார நாயக்காவால் அதற்கு வக்காலத்து வாங்கப்பட்டு பின்பு 1939ஆம் ஆண்டு கண்டிச் சிங்களவரான ஏ.இரத்தினநாயக்காவால் மாகாணசபைத் தீர்மானம் பிரேரிக்கப்பட்டு அது கரையோரச் சிங்களவரான பண்டார நாயக்காவால் பெரிதும் ஆதரித்துப் பேசப்பட்டு 1940ஆம் ஆண்டு நிறைவேற்றவும் பட்டது.

இப்படியாக முற்றிலும் சிங்களவர் பக்கத்திலிருந்தே சமஷ்டியோ அன்றி அதைச் சார்ந்ததான கோரிக்கைகளோ தீர்மானங்களோ எழுந்தநிலை முற்றிலும் 1949ஆம் ஆண்டை அண்டி அற்றுப்போகவே அதன் பின் தமிழர் தரப்பிலிருந்து 1949ஆம் ஆண்டு சமஷ்டிக் கோரிக்கை எழுந்து அதன்பேரால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் (சமஷ்டிக் கட்சி) உதயமானது.

(தொடரும்)

காடழிப்பவர்களைக் காவல் துறையினர் கைது செய்யும் சந்தர்ப்பங்களில் அவர்களை விடுவிக்கவும் பறி முதல் செய்யப் பட்ட மரங்களை மீளப்பெறவும் இதே அரசி யல் வாதிகள் காவல் துறை யினர், சிங்கள அமைச்சர்கள், தலைமை அமைச்சர், அரச தலைவர் ஆகியோரைப் பின்கதவால் நாடிப்போய் விடுவித்ததன் மூலம் மிகப் பெரிய காடழிப்புக்கு வித்திட்டார்கள்.

**மணல், மண், கிரவல் ஏற்றுமதி**

வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியிலுள்ள மூல வளங்களைப் பாதுகாப்பதில் பிரபாகரன் அதிக அக்கறை செலுத்தினார். புல்மோட்டையில் இல்மனைற் கருமண் படிவுகளை ஏற்றுவதற்காகத் தரித்திருந்த கப்பலைக் கடற்புலிகள் தாக்கியழித்தனர். இதனால் அங்கிருந்து இல்மனைற்றை அகழும் பணியை அரசால் தொடரமுடியாது போனது. காங்கேசன்துறை சீமெந்து ஆலையின் இயக்கத்தைப் புலிகள் நிறுத்தினர். அது தொடர்ந்தும் இயங்கினால் சுண்ணாம்புக்கற்கள் தோண்டி எடுத்த பகுதிகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறைப் பேராசியர் புவனேஸ்வரன் ஆய்வுசெய்து தளபதி கிட்டுவிடம் ஆய்வறிக்கை கையளிக்கப்பட்ட பின்னரே (ஆய்வை மேற்கொள்ளுமாறு கிட்டு கேட்டிருந்தார்) காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலையைப் புலிகள் முடக்கினர். இவ்வாறாகப் பல விடயங்களில் தலைவர் பிரபாகரனும் அவருடைய அமைப்பும் கவனம் செலுத்தியிருந்தன. மிகக் கடும் சட்ட நடை முறைகளைப் பேணினர்.

ஆனால், தற்போது தாங்களும் புலிகள்தான் என்று காட்ட முனையும் தமிழ் அரசியல்வாதிகள் இவ்வாறான எவ்வித சிந்தனைகளையும் கொண்டிருப்பதில்லை. புலிகளின் இலட்சியங்கள், செயற்பாடுகளுக்கு எதிரான காரியங்களைச் செய்துகொண்டு தம்மைப் புலிகளின் வழியைப் பின்பற்றுபவர்கள் என மக்களுக்குப் பிரதிபலிக்கிறார்கள்.

2009இல் புலிகள் அழிக்கப்பட்ட பின் வகைதொகையின்றி மணல், மண், கிரவல் எனக் கொழும்பு வரைத் தமிழ் அரசியல் வாதிகளாலும் அவர்களின் தயவாலும் வெட்டி ஏற்றப் பட்டது. தமிழ்த் தேசியம் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினரின் மனைவியின் பெயரில் பல ஹெக்டயர் மண்மேடுகள் கௌதாரிமுனை - மண்ணித்தலைப் பகுதியில் விலைக்கு வாங்கி விடப்பட்டிருக்கிறது என்றுகூடத் தகவல்கள் உண்டு. நாடாளுமன்றப் பதவி முடிந்த பின்னர் அவர் மணல் வியாபாரியாக மாற வாய்ப்புண்டு. வன்னியைச் சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பல ஏக்கர் காடுகளைப் பாலியாற்றங்கரையில் தன்வசப் படுத்தி வைத்திருப்பதும் இவ்வாறான முயற்சிகளில் ஒன்றே. இவை பிரபாகரனது எண்ணத்துக்கு நேர் எதிரானவை.

**ஆயுதப்போராட்டத்தில் களமிறங்கி அதன் மூலம் தனது நோக்கத்தை எட்ட முயன்ற பிரபாகரன் எதிரிகளுக்கு நெடுங்காலமாகச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார்**

**மாகாணசபைக் கட்டடம்**

வடக்கின் 5 மாவட்டங்களையும் மையப்படுத்திய வடமாகாணத்துக்கான மையமாகப் புலிகள் மாங்குளத்தைத் தீர்மானித்துத் தமது நிர்வாகக் கட்டமைப்பை அங்கு நிறுவினர். 2013இல் வடக்கு மாகாணசபைத் தேர்தலின் பின் வடமாகாண சபைக்காக கட்டடம் கைதடியில் கட்டப்பட்டது. வெளிநாடுகளில் வசதியாக வாழ்கின்றவர்களின் வீடுகளுக்கு வாடகை என்ற பெயரில் அதிக பணம் செலுத்தி அமைச்சுகள் நிறுவப்பட்டன. தனியார் வீடுகளை வாடகைக்குப் பெற்று உத்தியோக பூர்வ இல்லமாக்கினர். சிலர் தமது வீட்டையே பதிவு செய்து வாடகை வாங்கிய புதினங்களையும் செய்தார்கள். மாங்குளத்தில் இந்தக் கட்டடத்தை ஏன் அமைக்கவில்லை என்று முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கேட்டபோது, மாங்குளத்தில் நல்ல குடிதண்ணீர் இல்லை என்று பதிலளித்தார் அவர். வடமாகாணசபைக் கட்டத்தை மாங்குளத்தில் கட்டியிருந்தால் அந்தப் பகுதியில் பல்வேறு முன்னேற்றங்கள் நடந்திருக்கும்.

**நாடாளுமன்றத்துக்குச் செல்லவிரும்பாத பிரபாகரன்**

"தமிழருக்குத் தலைமை தாங்கக்கூடிய சிறந்த தலைவர்கள் யாராவது உள்ளார்களா என்று தேடிப்பார்த்தேன். யாரும் கிடைக்கவில்லை. அதன் பின்னரே நான் முடிவெடுத்தேன். நானே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வது என்று" என்று பிரபாகரன் செவ்வி ஒன்றில் சொல்லியிருப்பார். அவரது காலத்தில் இருந்த தலைவர்கள் மக்களுக்கு ஒரு கதையும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒரு கதையும் கூறி கொழும்பில் வாழ்வதும் மக்களின் வாக்குகளை ஒவ்வொரு தடவைகளும் ஏமாற்றிப் பெறுவதையுமே கருத்தில்



கொண்டிருந்தனர். இப்போதுவரை அதுவே தொடர் கிறது.

நாடாளுமன்றத்துக்குச் செல்வது என்ற நோக்கத்துடன் இருப்பவர் அதனால் கிடைக்கும் வாகன வசதிகள், ஏனைய சலுகைகள், சிறப்புரிமைகளை அனுபவித்துச் செல்கிறார்களே தவிர தமிழ் மக்களுக்குச் சேவையாற்று வதற்காக அங்கு செல்வதில்லை என்பதைப் பிரபாகரன் நன்கு அறிந்து வைத்திருந்தார். தாமும் புலிகள் எனக் காட்டிக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாமும் புலிகள் எனக் கதை விடுவது நாடாளுமன்ற அரசியலைப் புறக்கணித்த பிரபாகரனின் செயற்பாடுகளுக்கு நேர் எதிரான செயற்பாடு.

ஆயுதப்போராட்டத்தில் களமிறங்கி அதன் மூலம் தனது நோக்கத்தை எட்ட முயன்ற பிரபாகரன் எதிரிக ளுக்கு நெடுங்காலமாகச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந் தார். தனது குறிக்கோளில் அவர் கொண்டிருந்த உறுதி காரணமாகப் பிரபாகரன் மீது பல்வேறு விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனாலும் கையில் எடுத்த கொள்கையி லிருந்து மாறாமல் தனது முடிவில் இறுதிவரை உறுதியாக இருந்தவர் அவர். இதனால் தனது குடும்பத்தை, உறவு களை, நண்பர்களை இழந்தார். இறுதியில் தன்னையும் இழந்தார். தமிழ்த் தேசியத் தலைவராக அவர் ஒருவரை மாத்திரம் தமிழ் மக்கள் விரல் நீட்டிச் சுட்டிகாட்டுமளவுக்குத் தனது வாழ்க்கையைத் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித் திருந்தார் அவர்.

தற்போது தாங்களும் புலிகளே என்று சொல்லித் திரி பவர்கள் அத்தகைய தியாகம் ஒன்றைச் செய்யும் துணி வுள்ளவர்களோ விருப்பம் உள்ளவர்களோ அல்லர். பிர பாகரன் பற்றித் தமிழ் மக்கள் தெரிந்திருப்பதைவிடத் தற் போதுள்ள தமிழ்த் தலைவர்கள் பற்றிப் புரிந்து செயற் படுவதே எதிர்காலத்தில் அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள உதவுவதாக இருக்கும்.

---

# சம்பந்தனுக்குக் கைகொடுக்குமா சர்வதேசம்...?

ரவீந்திரன்

அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசுடன் தனது சுயபுத்திக்கு ஏற்ப காய் நகர்த்தல்களைச் செய்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். அது இழுபறிப்படுவதாகவே எப்போதும் இருந்துவருகிறது. இதனால் அவ்வப்போது கடுமையாக விமர்சிக்கவும்படுகிறது. அவ்வாறு விமர்சனத்துக்குள்ளாக்கப்படும்போதெல்லாம், சிங்கள ஆட்சியாளர்கள் தீர்வைத் தரப்போவதில்லை அது வெறும் கானல் நீர். பன்னாடுகளிடம் இதுபற்றி முறையிடுவோம் - என்று கூறுவது அவரது வழக்கமாக இருந்து வருகிறது.

அரசியல் தீர்வுக்கான பேச்சு என அரச தலைவர் ரணில்விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்ததும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கலந்தா லோசிக்காமலே பேச்சுக்குத் தாம் தயார் எனச் சம்பந்தனும் சுமந்திரனும் அறிக்கை விட்டனர். இதனால் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளா கினர். நாங்கள் அதை முழுமையாக நம்பவில்லை. நாங்கள் இந்த முன்னெடுப்பைக் குழப்பியதாக இருக்கக்கூடாது என்பதற்காகவே இணங்கினோம் என்று பின்னர் காரணம் கூறினர். முடிவில் ஒருபோதும் எட்டிப்பிடிக்க முடியாத பன்னாடுகளை ஆதரவுக்கு அழைத்துள்ளனர்.

**விபூதி அடிக்கும் கதைகள்**

தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்திராகாந்தியுடன் பேசியிருக்கிறோம் ஜப்பானுடன் பேசி வருகிறோம் என்று அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கத்தின் காலத்திலிருந்து கூறி வந்தாலும் அங்கெல் லாம் என்ன பேசினார்கள் என்பதை வெளியே சொல்வதில்லை. ஒன்றுமே யில்லாத அந்த விடயத்தை மிகவும் இரகசியமாகப் பேணி வருவதாகக் காட்டிக்கொள்வர். இவர்களின் இந்தக் கருத்துக்கள் சிங்கள மக்க ளுக்கோ உலக நாடுகளுக்கோ சொல்லப்படுபவை அல்ல. தமது வாக்காளர்களான தமிழ் மக்களக்கு 'விபூதி அடிக்கும்' கதைகளே இவை. அதனால்தான் அன்று தீர்வு விடயத்தில் அமிர்தலிங் கத்தால் எதையும் சாதிக்க முடியவில்லை.



தமிழ் பேசத் தெரியாத ஆனால், தமிழ்ப் பெயருள்ளவர்கள் யாராவது உலக அரங்கில் முக்கிய பதவிக்கு வந்தால் அவர் களுடாகப் பன்னாட்டு விவகாரத்தைக் கையாளவிருக்கிறேன் என்று சம்பந்தன் கதை விடுவதும் இதன் தொடர்ச்சியே.



# ஹைபிரிட் என்கிற கலப்பின விதைகளின் ஆதிக்கம்

சுருளி

மனிதர்கள் தாம் வாழும் மண்ணின், சூழலின் இயல்புகளுக்கு ஒத்த உடல் இசைவாக்கத்துடன் படைக்கப்பட்டவர்கள். ஒவ்வொரு சூழலில் வாழ்பவர்களுக்கும் தனித்தனிச் சிறப்புகள் வளர்ந்துவரக் காணலாம். பிரதேசங்களைப் பொறுத்தும்கூட அவர்களின் வாழ்வியல் மாற்றங்கள், உடலியல் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும். இந்தச் சூழல் தாக்கம் பரம்பரை அலகுகளில் செல்வாக்குச் செலுத்திய வாறே தொடர்ந்துகொண்டிருக்கும். மனிதர்களுக்கு மட்டுமன்றிப் பற வைகள், மிருகங்கள் என அனைத்தினதும் நிலை இவ்வாறுதான். ஏன் தாவரங்கள், மரங்களின் நிலைகூட அப்படித் தான். நம்பவில்லையாயின் உதாரணம் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்...!

யாழ்ப்பாணத்தின் கரையோரத்தில் வளர்ந்தி ருக்கின்ற பழங்காலத்துத் தென்னை மரங்கள் காற்றுக்கோ மழைக்கோ இலகுவில் சாய்ந்துவி டக்கூடியவை அல்ல. அவற்றோடு சேர்த்துப் பிற்காலத்தில் நாட்டிய வேறு இடங்களைப் பூர்வீகமாகக் கொண்ட தென்னைகள் இலகுவில் இவ்வாறான புறக்காரணிகளால் பாதிக்கப்படுபவையாக இருக்கின்றன.

புறக்காரணிகளை விடுங்கள், அந்தப் பகுதிகளில் தொடரும் நோய்க் காரணிகளை அந்தப் பகுதித் தென்னைகள் எதிர்த்தும், தாக்குப்பிடித்தும் வளரப் பின்வந்த தென்னைகள் தம்மால் முடியாமல்போய் மூச்சை விடுகின்ற சம்பவங்கள் இப்போதும் தொடர்கின்றன. இது அந்தந்த இடங்களுக்கேயுரிய பூர்வீக இனங்களில் எத்தகைய ஆற்றல்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளப் போதுமானதாக இருக்கலாம். இப்படியிருக்கப் பாரம்பரிய விதையினங்களைத் தவிர்த்து நவீன - கலப்பின விதையினங்களுக்கு அடிமையாவது என்பது எத்தகு தீங் கானது. வாழ்க்கை முறையை - உடல் இசைவாக்கத்தை - சூழல் பிணை ப்பை அறுக்குமல்லாவா அது.

**இந்தியன் முருங்கை**

நம்மூரில் உள்ள முருங்கையினங்களைப் பாருங்கள்... தடி தடியாக வெட்டி வைத்துக் காலம் காலமாக இன்றுவரை இனம் அழியாமல் இருக்கின்றன. அந்த முருங்கைக் காய்களின் சுவையும் தனித்துவமானது. ஆடி, ஆவணி மாதங்களில் நிலவும் கடும் வெயிலிலும் வறட்சிக் காலத்திலும் மூச்சைப் பிடித்து நின்று வளரும் திறன் அவற்றுக்குண்டு,

ஐ.நா. மனித உரிமை ஆணையா ளராகவிருந்த நவநீதம்பிள்ளையைச் சம்பந்தன் அணி அவ்வாறே பயன் படுத்தியது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அமோக வெற்றியைப் பெற் றுக் காட்டினால் அதை வைத்துத் தமி ழீழத்துக்கான பிரேரணையை ஐ.நா வில் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவி ருக்கிறார் என்று கதை கட்டவிழ்த்து விடப்பட்டது. வடக்குக் கிழக்கில் தமி ழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றி பெற்றால் தேர்தலுக்கு அடுத்த நாளே நாம் தமிழீழத்தில் இருப்போம் என்று 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழீழம் என்ற ஒன்றைக் காட்டித் தேர்தல் பரப்புரை மேடைகளில் அமிர்தலிங்கம் கூறியதற்கு ஒப்பானது இது.

**சிறிய நாடுகளைக்கூட பக்க பலமாக்கவில்லை**

பன்னாட்டு அணுகுமுறைகளின் முதற்படியாக மாலைதீவு போன்ற ஒரு சிறிய நாட்டையாவது ஐ.நாவில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க வைக்கக்கூடிய ஏற்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மேற் கொள்ள முடியவில்லை. எந்தவித அணுகுமுறைகளோ, தரவு சேகரிப் புகளோ, தலைமைச் செயலகமோ இல்லாத ஒரு கட்சி எவ்வாறு பன்னா டுகளை அணுக முடியம்...? தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைவிட இலங்கையின் கேந்திர முக்கியத்து வத்தைக் கையாள்வதே அயல் நாடான இந்தியாவுக்குக் கூட முக்கிய மாக இருக்கிறது.

இலங்கை அரசு என்பது சிறியதாக இருந்தாலும் ஒரு நாட்டுக்குரியது. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அரசு. அதற்கு முப்படைகள், ஏனைய கட்டமைப்புகள் ராஜதந்திர உறவுகள், கொள்ளல் கொடுத்தல் என பல்வேறு உறவுகள் பன்னாடுகளுடன் இருந்து வருகிறது. இந்த நிலையில் சிறுபான் மைச் சமூகத்தின் ஒரு கட்சியால், எவ்வாறு எடுத்த எடுப்பில் பன்னாடு களைத் தமக்குச் சார்பாகத் திசை திருப்ப முடியும்? அதற்கான பொறி முறைதான் என்ன? தமிழ் மக்களின் அரசியல் விடயத்தில் அயல் நாடான இந்தியாவைக் கையாளும் வல்லமை கூடத் தமிழ்த் தலைவர்களுக்கு இல்லை என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்வதே இன்றுள்ள அடிப்ப டைத் தேவையாகும்.

ஆனால், நம்மவர்கள் இந்தியன் முருங்கைக்கு அடிமையாகி விட்டார்கள். அளவு கணக்கின்றிக் காய்க்கும் அதன் சுவை பச்சைத் தண்ணி என்பார்கள் முதியவர்கள். ஏன் அதிக வெயிலில் வாடி வதங்கிக் கிடப்பதோடு நீர்த் தட்டுப்பாடு என்றால் இந்தியன் முருங்கையின் நிலை அவ்வளவுதான்... ஆனால், நம்மவர்களில் அதிகம் பேர் பாரம்பரிய முருங்கையைத் தவிர்த்து இந்தியன் முருங்கைக்கே மாறிவிட்டார்கள். கைவிடப்பட்டதுடன் அருகியும் வருகிறது நமது முருங்கையினம். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிராமத்து வேலிகளில் எஞ்சிக் கிடக்கிறது.

**விதையிங்கள்**

இலங்கை மக்களின் பாரம்பரிய விவசாயத்தில் தானியங்கள், மரக்கறி வகைகள் என எல்லாமே அவற்றின் முற்றிப் பழுத்த பழங்களில் இருந்து விதையாகப் பெற்று அந்த விதைகளை முளைக்கச் செய்வதன் மூலம் காலம்காலமாக பருவகாலப் பயிர்ச் செய்கையாக இருந்து வந்தது. இந்த நிலை 1977இல் ஜெ.ஆர். ஜெயவர்த்தன பதவிக்கு வந்ததும் கொண்டுவந்த திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக மாற்றமடைந்தது. உள்நாட்டு உற்பத்திகளுக்கு மாறாக வெளிநாடுளில் இருந்து தானியங்களையும் பழங்களையும் மரக்கறி வகைகளையும் இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டது.

இதில் முதலில் பாதிக்கப்பட்டது விபிலைப் பகுதியே. அங்கு மிகவும் புகழ்பெற்ற தோடை, தேசி இனங்கள் அழிந்தன. அப்போதைய மகாவலி அமைச்சராக இருந்தத காமினி திசாநாயக்கா ஆஸ்திரேலியாவில் இருந்து மஞ்சள் தோடம் பழங்களை இறக்குமதி செய்வதற்காக விபிலை தேசி தோடை விவசாயிகளுக்கு ஒருவகை உரத்தை வழங்கினார். அதைப் பாயன்படுத்திய ஓரிரு ஆண்டுகளில் தேசி தோடை மரங்கள் பட்டுப்போயின. அதன் பின்னர் இன்றுவரை மஞ்சள் தோடம் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல நெல், தானியங்கள், பழவகை, மரக்கறி வகை என்பவற்றிலும் இந்தக் கலப்பின விதைகள் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன. இதனால் பாராம்பரிய விதைகள் கைவிடப்பட்டு, அழிந்து போய் விட்டன. யாழ்ப்பாணத்தில் மட்டுவில் கத்தரிக்காய் (வெள்ளை) இனம் மட்டும் பாரம்பரிய விதையைப் பேணும் முறைகளில் இன்று வரை பயிர் செய்யப்படட்டு வருகிறது.

இந்தக் பலப்பின விதைகளைப் பயிரிடுவதால் அதிக விளைச்சல் கிடைக்கும் என்ற ஆசை விவசாயிகள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், அதன் மூலம் பெறப்படும் விதைகள் முளைக்காது, முளைத்தாலும் பூக்கவோ காய்க்கவோ மாட்டாது, அவ்வாறு காய்த்தாலும் அடுத்த தடவை முளைக்கச் செய்வதற்குரிய விதைகள் அவற்றில் இருக்காது.

இந்தியாவிலிருந்து ஆட்டக்காரி என்ற நெல்லைக் கொண்டு வந்து மன்னார் மாவட்ட விவசாயிகள் பயிரிட்டனர். பின்னர் அந்த விதை நெல்லைப் பயன்படுத்தி உள்ளூரில் மீண்டும் மீண்டும் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு மேல் இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டு வருவதுடன் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் விதைக்கப்படுகிறது. இது இந்தியாவினுடைய பூர்வீகம் என்றாலும் பாரம்பரிய விதையினமாக இருக்கிறது. விவசாயத் திணைக்களம் ஆட்டக்காரி விதை நெல்லை இன்று வரை அங்கீகரிக்கவில்லை. விவசாயிகளுக்குக் கலப்பின நெல் விதைகளையே வழங்கி வருகிறது.

கலப்பின விதைகள் என்பவை பாரம்பரிய விவசாயத்தை அழிக்கின்றன. மட்டுவில் வெள்ளைக் கத்தரிச் செய்கையாளர்களும் ஆட்டக்காரி, மொட்டைக்கறுப்பன், சீனட்டி நெல் விவசாயிகளும் இதை நன்கு விளங்கி வைத்திருப்பதால் தமது விவசாயத்தில் கலப்பினத்தைத் திணிக்க இடமளிக்கவில்லை.

**18**

## வாரம் ஒரு சொல்...!

### தமக்கை, தமையன்
### கொக்கா, கொண்ணன்

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகின்ற அக்கா, அண்ணன் ஆகிய தன்மை சொற்களுக்குப் பதிலீடாக முன்னிலையிலும் படர்க்கையிலும் வேறு சொற்களைக் கையாளப்படுகின்றன. அவன்ர அக்கா என்பதைப் படர்க்கையில், அவன்ர தமக்கை எனவும் அவன்ர அண்ணா என்பதை அவன்ர தமையன் என்றும் பயன்படுத்துகின்றனர்.

"செத்தவீட்டுக்குத் தமக்கை மட்டும்தான் வந்தவளாம்"

"அவன்ர தமையன்ர மகளுக்குக் கலியாணமாம்" எனப் பலவாறாகத் தமக்கை, தமையன் ஆகியனவற்றைப் பயன்படுத்துகின்றனர். அதேவேளை ஒருவரை நேரில் சந்திக்கும்போது அக்கா, அண்ணா என்று விளிக்காமல் பேசும் பழக்கமும் உண்டு

"கொக்கா எந்த நாட்டில இருக்கிறா?" என்பார்கள். இதில் கொக்கா என்பது அக்காவைக் குறிக்கும்.

அதேபோன்று அண்ணண் என்ற சொல்லுக்குப் பதிலாகக் கொண்ணன் என்று அழைப்பதுண்டு.

"கொண்ணைக்கு எத்தின பிள்ளையள்?"

"கொண்ணன் இப்பவும் வயல் செய்யிறவனே?"

ஆகிய சொற்கள் கிராம மட்டத்தில் இப்போதும் பாவனையில் உண்டு. அண்ணா, அக்கா ஆகிய சொற்களுக்குச் சமமான தமிழ்ச் சொற்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுவதே இதன் சிறப்பு.



# மாலி

மருத்துவர்
சி. யமுனாநந்தா

## இலங்கைக்கான உதாரணம்!

இலங்கையும் மாலிதேசமும் 19ம் நூற்றாண்டுக்கு முன்னர் சுதேச அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. அதன் பின் ஐரோப்பிய காலனித்துவத்தால் தமது சுயாதிக்கத்தை இழந்தன. உலக அரசியல் ஒழுங்கிற்கு ஏற்ப இரு நாடுகளிலும் சிறுபான்மையினர் ஒதுக்கப்பட்டு பெரும் இனஅழிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. மாலியல் இனங்களுக்கு இடையிலான வன்முறைகள் 1963, 1990, 2002 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தன. இலங்கையிலும் 1958, 1977, 1983 இல் நிகழ்ந்துள்ளன. இவற்றுக்கு மேலாக 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வு, 2008 - 2009 வன்னி அழிவு என்பன பெரும் மானிடப் பேரிடரை ஏற்படுத்தின.

மாலி தேசம் ஆபிரிக்க கண்டத்தின் போக்குவரவு பொருளாதார மையமாக அமைவது போல் இலங்கையும் தென்கிழக்காசியாவின் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. மாலிதேசத்தில் சிறுபான்மையினர் எவ்வாறு அழிந்தனரோ அவ்வாறே இலங்கையிலும் சிறுபான்மைத் தமிழர்கள் அழிக்கப்பட்டனர். மாலி தேசத்தில் ஏற்பட்ட சிக்கலான அரசியல் படைத்துறைச் சூழலை எதிர்கொள்ள பிரான்ஸ் நாட்டுப் படைகள் 2013 இலும் அதனைத் தொடர்ந்து ஐ. நா. அமைதிப் படையும் செயற்பட்டன. இப்படைகள் பெரும் மனித உரிமை மீறல்களும் பாலியல் கொடூரங்களும் நிகழ்ந்துள்ளன. அவ்வாறானவை இலங்கையில் தமிழர் பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்தன. 1987க்கு முன்னர் இலங்கைப் படைகளும் 1987 - 1990 களிலு இந்திய அமைதிப் படையும் 2005 - 2009இல் முகவரி இல்லாத பல்வேறு படைகளும் செயற்பட்டு பெரும் மனித அவலங்களையும் பாலியல் கொடூரங்களையும் ஏற்படுத்தின.

மாலியின் அரச முன்னெடுத்த சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளால் முக்கியமான ஏற்றுமதிப் பொருளான பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இலங்கையிலும் விவசாய உற்பத்திகள், தேயிலை உற்பத்தி என்பன பாதிக்கப்பட்டுள்ளன. மாலியில் ஆட்சியாளர்கள் அநீதியான செயற்பாடுகள், ஊழல்கள் என்பனவற்றை மேற்கொண்டனர். அதற்கு நிகராகவே இலங்கையிலும் நிகழ்ந்துள்ளது.

மாலி பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள சர்வதேச நாணயநிதியம் உலகவங்கி என்பன ஆலோசனைகளை வழங்கின. மின்சாரம் வழங்கல் தனியார் மயமாக்

கப்பட்டது. நீர் வழங்கல் தனியார் மயமாக்கப்பட்டது. படைத்துறை உயர் அதிகாரிகள் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை நிறுவினர். இலங்கையிலும் அரச நிறுவனங்கள் பலவும் தனியார் மயப்படுத்தும் சூழல் உருவாகி உள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வறுமை மட்டம் அதிகரித்துள்ளது. அதாவது பஞ்சம் பரவி உள்ளது. சிறுவர்களின் போசணை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இன்னிலையில் இலவச மருத்துவ சேவை இலவசக் கல்விச் சேவை சடுதியாக செயலிழக்க நேரிடலாம். இதனைத் தவிர்க்க ஆக்கபூர்வமான உத்திகளை நாம் கையாள வேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் முதலில் மேற்கொள்ள வேண்டிய மாற்றம் படைத்துறைச் செலவீனங்களை 25 சதவீதமாகக் குறைத்தலே. இலங்கைத் தரைப் படையில் உள்ள தொண்டர் படையணியினை முற்றாக நிறுத்தலாம். ஏனெனில் போர் போன்ற அவசர சூழலிலேயே படைகளின் ஆளணி அவசியம். தற்போதைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் 100,000 படையினர் செய்யும் கடமையினை 1000 படையினர் செய்ய முடியும். மேலும் வடக்கு கிழக்கில் பொருளாதார வளமுள்ள இடங்களை பாதுகாப்பு என்ற பெயரில் கையகப்படுத்தி வைத்துள்ளமையும் தவறாகும்.

இலங்கை போன்ற சுமார் 21 மில்லியன் சனத்தொகை கொண்ட மாலி தேசம் எவ்வாறு வளமான எதிர்காலம் இல்லாது அழிவுறுகின்றதோ அவ்வாறான நிலைமையே இலங்கையில் ஏற்படுகின்றது.

கெடுவான் கேடு நினைப்பான் என்பதுபோல் இலங்கை அரசியல்வாதிகளிடையேயோ இலங்கை நாடாளுமன்றப் பிரதிகளிடையேயோ சமூகப் பொருளாதாரம் தொடர்பான ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் இல்லை. இலங்கையில் காலம் காலமாகப் புரையோடியுள்ள அரசியல் பிணக்குகளைத் தீர்ப்பதற்குக்கூட ஆணித்தரமான அணுகுமுறைகள் இல்லை.

**இலங்கையில் காலம் காலமாகப் புரையோடியுள்ள அரசியல் பிணக்குகளைத் தீர்ப்பதற்குக்கூட ஆணித்தரமான அணுகுமுறைகள் இல்லை.**

இந்நிலையில் மாறிவரும் புதிய உலக ஒழுங்கில் பாரதத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் செம்மையா அணுகுமுறைகளை நாம் உற்றுநோக்கல் வேண்டும்.இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் நிழலே தற்போது எம்மை பட்டினிக்கு இட்டுச்செல்லாது காப்பாற்றுகின்றது.



இந்நிலையில் வடபகுதித் தமிழ் மக்கள் விவசாயம், சிறுகைத்தொழில், மீன்பிடி, நடுத்தரவர்க்கம், மருத்துவம் என்பவற்றில் தமிழகம் சார்ந்த முதலீடுகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். இன்று இலங்கையில் மக்களாட்சி, பொருளாதாரம், இராஜதந்திரம் அற்ற போலி அரசே செயற்படுகின்றது.

இவ்வரசின் தீர்மானங்களின் சட்டபூர்வதன்மை, அதன் ஆதிக்க எல்லை என்பன காலத்துடன் இல்லாதுபோகும் சூழலே உள்ளது. இத்தகைய சூழலில் எமது மக்கள் புலம்பெயர்ந்து உலகெங்கும் அவலப்படுதல் ஆகாது. நாம் உறுதியுடன் எம்மண்ணில் நின்று நிகர பொருளாதார மேன்னிலையையுடைய சமூக சக்தியாகச் செயற்பட வேண்டும். நாம் இச்சந்தர்ப்பத்தில ஓர் விவசாயிக்குப் பின்னால் செல்லலாம். ஆனால் ஓர் அரசியல்வாதிக்குப் பின்னால் செல்லக்கூடாது. மாலி தேசத்தில் நிகழ்கின்ற அரசியல் பொருளாதார சமூகச் சிக்கல் நிலையில் இருந்து எமக்கு சில பாடங்கள் தெட்டத் தெளிவாகப் புலப்படுகின்றன.

ஆபிரிக்கக் கண்டத்தில் உறுதியாக இருந்த நாடுகளான லிபியா, லைபீரியா, எகிப்து போன்றன திட்டமிட்டு அழிக்கப்பட்டுவிட்டன. அதேபோல் ஓர் நிலைமையினை ஆசியாக் கண்டத்தில் ஏற்படாது இருப்பதனை தற்போதைய ரஷ்சிய உக்ரெயின் யுத்தத்தில் இந்தியாவின் அணுகுமுறை காப்பாற்றிவிட்டது. இந்நிலையில் இந்திய அரசின் இராஜதந்திர, பொருளாதார ஒத்துழைப்புக்கள் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள உதவுவதுடன் எமது அரசியல் பிரச்சினைகளுக்கும் நிரந்தர முற்றுப்புள்ளியினை வைக்கும்.

இந்திய அரசும் பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற பெயரில் இலங்கையில் தமிழர் தாயகத்தில் நிகழும் படைத்துறை ஆதிக்கத்திற்கும் பௌத்த மயமாக்கலுக்கும் மறைமுகமாகத் துணை போதல் தவறானதாகும். அமைதியினை நேசிக்கக் கற்றுக்கொள்வோம். வன்முறை வழிகளை நாடோம். அடக்குமுறைகள் மூலம் நிகழும் பொருளாதாரச் சுரண்டல்களை இல்லாது செய்வோம்.



சமையல்
சமையல்

# சூசியம்



இனிப்பான உட்சேர்க்கையைக் கொண்டிருக்கும் சூசியத்தை விரும்பாதவர்கள் இருக்க முடியாது. மாவுருண்டைபோல இருக்கும் சூசியத்தை வீட்டில் செய்து உண்பவர்கள் குறைவு. கடைகளில் கிடைக்கும் உறைப்பான உட்சேர்க்கையைக் கொண்ட றோல், பற்றிஸ், போண்டா போன்றவற்றைத் தேநீருடன் அருந்தவதுபோலதான் சூசியத்துக்கென்றும் பிரியர்கள் இருக்கிறார்கள். முன்பெல்லாம் கடலைப் பருப்பை உட்சேர்க்கையாகக் கொண்டமைந்த சூசியம் பிற்காலத்தில் பயறையும் உட்சேர்க்கையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. ஆனாலும் கடலைப் பருப்புச் சேர்க்கும்போது கிடைக்கும் ருசி தனியானது. கடலைப் பருப்பை உட்சேர்க்கையாகக் கொண்டு சூசியம் தயாரிப்பது எப்படி என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

கடலைப் பருப்பு - 2 கப்
சீனி - 1கப்
மாவு - 1 கப்
தேங்காய்த் துருவல் - அரை கப்
ஏலக்காய்த் தூள் - அரைத் தேக்கரண்டி
எண்ணை - பொரிக்கத் தேவையான அளவு
உப்பு - சிறிதளவு

**எப்படித் தயாரிப்பது**

முதலில் கடலைப் பருப்பை தண்ணீரில் 2 மணித்தியாலங்கள் வரை ஊறவைக்கவேண்டும். ஊறியதும் சிறிதளவு உப்புச் சேர்ந்து அவித்தெடுக்கவேண்டும். இதனுடன் தேங்காய்த் துருவல் மற்றும் சீனி ஆகியவற்றைச் சேர்த்துக் கலந்துகொள்ளவேண்டும். கடலைப்பருப்புக் கலவையை இலேசாக மசித்துக்கொள்ள வேண்டும். கையோடு ஏலக்காய்த் தூளையும் சேர்க்கவேண்டும். சேர்த்ததும் ஒரே அளவான உருண்டைகளாகப் பிடித்து வைத்துக்கொள்ளவேண்டும். பின்னர்,பிறிதொரு பாத்திரத்தில் கோதுமை மாவை இட்டுத் தண்ணீர் சேர்த்து சிறிது உப்புச் சேர்த்து மாக் கலவைபோன்ற பதத்தில் ஆக்கிக் கொள்ளவேண்டும். எண்ணைச் சட்டியை அடுப்பில் வைத்துச் சூடாக்கிக் கொண்டு, அந்த மாக் கலவைக்குள் கடலைப் பருப்புக் கலவை உருண்டையைத் தோய்த்து எடுத்து எண்ணெய்யில் பொரித்து எடுத்தால் சுவையான சூசியம் தயார். உள்ளகத்திலுள்ள கடலைப் பருப்புக் கலவை ஏற்கனவே அவிக்கப்பட்டது ஆகையால் சூழவுள்ள மாக்கலவை பொரிந்த கையோடு இறக்கிவிடவேண்டும்.

கதிரேசன் காத்தவராயன்

# அறிவு கூடினாலும் பிரச்சனையோ?

நேற்றைக்குப் பின்னேரமாய் சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டுக்குப் போயிருந்தன். அண்டைக்கு வாசிசாலையடிக் கதைப் புதினங்களை அவரோடை அலசலாமெண்டிறதுதான் நோக்கம். மாஸ்ரர் சாய்மனைக் கதிரையிலை இருந்தார். கண்டிட்டு 'வாரும்... வாரும் கதிரேசர்! ஆயுள் நூறு உமக்கு' எண்டு உற்சாகமாய் வரவேற்றார். இருந்துகொண்டன்.

'எப்பிடியப்பா நாட்டு நடப்புகள்?' எண்டு தொடங்க, நானும் அண்டையான் பங்கீட்டுப் பிரச்சனையளைச் சொல்லச் சிரிச்சார். அந்த நேரமாப் பாத்து ஒரு மூண்டு பேர், சுதன்ரை சினேகிதங்கள்தான் வந்தாங்கள். வழமையாய் வாற பெடியள்தான். அறிமுகமிருந்ததாலை சிரிச்சபடி வந்து இருந்தாங்கள். ''எங்கை சேர் சுதன் இல்லையோ?' எண்டு கேட்டு கதையைத் தொடங்கினான் ஒருத்தன்.

'சுதனோ? இப்ப ரண்டு மூண்டு நாளாய் மாறி மாறிச் செமினாரெண்டல்லே ஓடுறான்... உங்களுக்கு உதுகள் இல்லையோ?' எண்டு மாஸ்ரர் கேட்டதுக்கு 'மாறிமாறி உதுதானே சேர் இப்ப... வரிசக் கடைசியல்லே கணக்குகளைப் பாக்கேக்கைதான் கண்டுபிடிச்சிருக்கினம் லட்சக்கணக்கிலை காசு மிஞ்சிக் கிடக்குதெண்டதை...' எண்டு எரிச்சலாய்ச் சிரிச்சான் ஒராள்.

'ரேம் எக்ஸ்சாமுமில்லே உதுக்குள்ளை... அதுகும் இப்ப ஐஞ்சாவது ரைம்ரேபிளின்படிதான் நடக்குது.. என்ன பாடம் எப்ப நடக்குமெண்டது சாத்திரம் பாக்கத் தெரிஞ்சாலும் கண்டு பிடிக்கேலாது...' எண்டான் மூண்டாவது ஆள். 'அப்ப பிள்ளையள் என்னனண்டு சோதினைக்குத் தயாராகி



89

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

எமது மனமானது எந்தவொன்றையும் இன்னொன்றுடன் ஒப்பிடத் தவறுவதில்லை. கற்பிதங்களை மனம் தன்னுள் ஒப்பீடுகளது பெறுதியாகவே அடுக்கி வைத்திருக்கிறது. கற்பிதங்களைப் பயன்படுத்துவதற்கான சுயவடிப்பொன்றைச் செய்வது அதுவும் ஒப்பீட்டு ரீதியாகச் செய்வது அர்த்தமற்றது. நான் எனும் தன்மை ஒருமையை ஒப்பீட்டிற்கு உட்படுத்தலாமா? அப்படியாயின் எதனுடன் ஒப்பிடுவது? எப்படி ஒப்பிடுவது? எதனுடன் அல்லது எவற்றுடன் குறித்தவொரு விடயத்தை ஒப்பீடு செய்துகொள்கிறது? ஒப்பிடலினது நிபந்தனைகள் எத்தகையன? போன்றவற்றைக் கவனத்திற்கொண்டு பகுப்பாய்விற்கு உட்படாத எந்தவொரு பெறுதியும் கேள்விக்குரியதே என்பதை முக்கியமாக மனத்தில் கொள்வத அவசியமானது.



ஆசைகள் கோபம், விருப்பு, வெறுப்பு என்பன போன்ற அனைத்துக்கும் காரணமாக அமைவது ஒப்பீட்டினது விளைபெறுதியாக எம்முள் குவிக்கப்பட்டிருக்கும் கற்பிதங்களேதான். எந்த மனம் ஒப்பிடலின் வழி கருத்துருவாக்கங்களை உருவாக்கிக்கொள்கிறதோ அதே மனம்தான் அலைந்தும் நொந்தும் கொள்கிறது. அதுதான் இங்கு கவனத்திலெடுக்கப்படவேண்டிய மிக முக்கியமான விடயம். ஆனால் அப்படியான ஒரு தெளிநிலை எம்மிடமிருக்கிறதா?

நான் என்னை என்னுடன் ஒப்பிடுவதேகூடத் தவறு. ஏனெனில் நான் ஒரு மாறி. வளர்சிதை மாற்றங்களைத் தவிர்க்க முடியாத ஒரு படைப்பு. உடல்சார் மாற்றம் அறிவுசார் மாற்றம் என கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கிறேன். இது தவிர்க்கப்படவே முடியாத உண்மை. அப்படியிருக்கையில் நான் என்னை இன்னொருடன் எப்படி ஒப்பிடமுடியும்? மாறிக்கொண்டே இருக்கிற ஒன்றை மாறிக்கொண்டே இருக்கிற இன்னொன்றுடன் ஒப்பிடுகிற வேலையைச் செய்துவிட்டு அங்கறது?' எண்டு நான் கேட்டன். 'பிள்ளையளின்ரை கல்வியோ ஐயா? அப்பிடியொண்டை நீங்கள் ஞாபகம் வைச்சிருக்கிறதே பெரிய விசயம்... அது எப்பவோ கைவிட்ட விசயம்லோ?' எண்டு ஒராள் சொல்ல எல்லாரும் சிரிச்சம்.

மாஸ்ரர் பெருமூச்சொண்டை விட்ட பிறகு 'கதிரேசர்..! தம்பி சொன்னதுதான்... தங்கடை கதிரையளிலை இருக்கிற அக்கறையிலை ஒரு ஐஞ்சோ பத்தோ வீதமான அக்கறையைக் காட்டினாலே அவை அடிக்கடி கதைக்கிற சித்தி வீதத்தை எவ்வளவோ கூட்டலாம்...' எண்டார். 'உண்மைதானே சேர்! ரான்ஸ்ஸர் குழறுபடியள் ஒரு பக்கம்... செமினாறுகள் ஒரு பக்கம்.. போட்டியள் மற்றப் பக்கம்... நாங்கள் எதைப் பாக்க? எதைச் செய்ய?' எண்டு சலிச்சான் ஒராள்.

முருகேசரும் சுதனும் ஒண்டாய் வந்து இருந்து கொண்டினம். 'என்னப்பா முருகேசு நீரும் செமினாறாலை வாறீர் போலை?' எண்டு மாஸ்ரர் கேக்க 'ஓமோம்... நானும் அதாலைதான்... நேரத்தை எப்பிடி வீணடிக்கிறதெண்டு ஒரு பயிற்சி வகுப்பு...' எண்டு முருகேசர் சிரிக்க எல்லாரும் சேந்துகொண்டம். 'என்னவாமடா சுதன்?' எண்டு ஒராள் கேக்க 'வழமையானதுதான் பேசென்றேஜ்சை உயத்துறதுக்குத்தான்... பள்ளிக்கூடம்போய் மூண்டு நாளாச்சு... முந்தநாள் ஆலோசனை, நேற்று கட்டாயக் கல்வி, இண்டைக்கு என்ரை பாடம்... ராவைக்கு வைபரிலை என்ன வருகுதோ தெரியாது...' எண்டு சுதன் சொன்னான்.

'தம்பியவை பெரியவை உதுகளைக் கண்டு கேக்கிறேல்லையோ?' எண்டார் முருகேசர். 'அதோ.. அவையும்தானே... ஆரை ஆர் கேக்கிறது? அதோடை எல்லாரும் பெரியாக்கள் தானே?' எண்டான் சுதன். 'அதுக்குள்ளை எங்கட வலயத்தைப்போலை கெட்டிக்கார வலயம் நாட்டிலையே இராது... ஒண்டரை மணிவரைக்கும் சோதினை எழுதுற பிள்ளையளை ரண்டு மணிக்கு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரட்டாம் எண்டும் அறிவித்தல்...' எண்டான் ஒராள்.

'எங்கடை பள்ளிக்கூடத்திலை இண்டைக்கு ஐஞ்சு பேர் தரவட்டம், கொமன் மாக்கிங், ஓ.எல். பேசென்ரேஜ் செமினார் எண்டு போட்டினம்... வகுப்புச் சோதினையை மேற்பார்வை செய்ய ஆக்களில்லை... என்னையும் வரச் சொல்லி கூப்பிட்டவை நான் போகேல்லை' எண்டான் ஒராள். 'அப்ப தம்பியவை சோதினை எப்ப முடியுது?' எண்டு கேட்ட முருகேசருக்கு 'கடைசிப் பாடச் சோதினைப் பேப்பரைப் பிள்ளையின்ரை கையிலை குடுக்கேக்கைதான் தீர்மானிக்கலாம் எண்ட நிலமைதான்' எண்டு சுதன் தயக்கத்தோடை சொன்னான்.

'இதுக்கையும் சில வலயங்கள் கெட்டித்தனமா குழப்பங்களில்லாமல் சமாளிச்சுக்கொண்டு போகுதுகள்தான்...அதுகளுக்கும் உந்தச் சேக்குலறுகளாலை தலையிடிதான் என்ன? எண்டான் ஒராள். 'அப்ப தம்பியவை படிச்ச ஆக்களிருக்கிற இடமெண்டு நாங்கள் நினைக்கிறது பிழையெண்டோ சொல்லுறியள்? கெட்டித்தனமெண்டது படிச்ச படிப்பிலை இல்லைப் போலை?' எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.

லாய்க்கிறோம்.

நாங்கள் இப்படியான ஒப்பீடுக ளுக்காக ஒரு சட்டகத்தை அல்லது ஒரு அளவுகோலைக் கையில் வைத் திருக்கிறோம். அந்தச் சட்டகம் அல் லது அளவுகோலினது நியமம் எத் தகையது என்றாவது எண்ணியிருக் கிறோமா என்றால் நிச்சயமாக இல் லையென்றே கூறிவிடலாம். ஏனெ னில் அதனை உருவாக்கியவர்கள் நாமேதான். எமது உருவாக்கத்தில் நாமே ஐயங்கொள்ள வாய்ப்பே இல்லை. சட்டகமோ அளவுகோலோ அவை வெறுமனே மாயைகளே. சடங்களல்ல. விருப்புகள், ஆசைகள், என நீளும் விடயங்களே அவற்றைத் தீர்மானிக்கின்றன.

கற்பிதங்களுக்கு ஆதாரமாக இருக்கும் ஒப்பிடலை நாம் கற்பிதங்க ளிலிருந்தே பெறுகிறோம் என்பது தான் விந்தைமிக்க உண்மை. அதா வது மனத்துள் ஏற்கனவே குவிக்கப் பட்டிருக்கிற கற்பிதக் குவியலில் இருந்தே ஒப்பிடலுக்கான சட்டகமோ அளவுகோலோ உருவாக்கப்படுகிறது. ஆகவேதான் ஒப்பீடு சரிவர அமை வதில்லை. அது நீடிப்பதில்லை. மாறிக்கொண்டிருக்கிறது. அதனை விட இவற்றை உருவாக்குகிற நாம் மாறிக்கொண்டிருக்கிறோம்.

இந்த ஒப்பீடானது மனதால் செய் யப்படுகிறது. மனம்கொண்டிருக்கும் பிரமாணங்களை மட்டும் அடிப்படை யாகக்கொண்டது. அப்படியான ஒரு சட்டகம் அல்லது அளவுகோல் தன் னையுருவாக்கிய மனதில் சலனத்தை ஏற்படுத்திவிடத் தவறுவதில்லை. அவ்வாறாக எழும் சலனம் ஏற்க னவே தீர்மானமாகி உறுதியாகிக் கிடக்கிற விடயங்களின்படி திருப்தி எதிர் அதிருப்பதி என்கிற நிலைக்கு மனதை இழுத்துச்சென்று விட்டு விடுகிறது.

சலனம் எழக் காரணமாக அமை வது எமது முன் தீர்மானங்களது தன் மையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இந்த முன் தீர்மானங்களை யார் உரு வாக்கியது? மனம்தான். அது தான் கொண்டிருக்கிற கருத்துருக்கள், பட்டறிவு, ஊகங்கள் போன்றவற்றிலே ஒன்றையோ பலதையோ அடியாகக் கொண்டு தனக்கான ஆசைகள், விருப்புகள் எதிர்பார்க்கைகள் என் பவற்றிற்கேற்ப தன்னுள் தானாகவே எடுத்திருக்கிற முடிவாகக் கொள்ள முடியும்.

அவ்வாறாக நாமே நமக்காக ஒரு பரப்பை உருவாக்கிக்கொண்டு அதை அடைதல், தக்கவைத்தல் என பிர யத்தனமெடுக்கிறோம். அவ்வேளை யில்தான் சட்டகம் அல்லது அளவு கோலானது தனது நிலையைத் தெரிவு செய்கின்றது. அவ்வாறான ஒரு நிலை யற்ற அளவுகோல் எப்படி ஒப்பீட்டி னைச் சரிவர ஆற்றமுடியும்?

இங்கேதான் மனதினது பன்முகப் பட்ட நிலைப்பாடானது கவனிப்புக்கு ரியதாகிறது. அதுவாகவே அறிந்து அதுவாகவே தேர்ந்து அதுவாகவே கருத்தைக் கட்டமைத்து அதுவாகவே ஒப்பீடுசெய்து என்கிற விதமாக இறுதியில் தான் யார் என்பதையும் தனக்கென்ன தேவையென்பதையும் தான் எப்படியிருக்க வேண்டுமென் பதையும் மறந்துபோகிறது. எல் லாவற்றையும் உருவாக்கிக்கொள்கிற அது தன்னைத் தகவமைப்பதிலிருந்து விலகிவிடுகிறது. எப்படி இது நடக்கி றது? சிந்திப்போம்.

---

## குளிரால்...

மாவட்டங்களைச் சேர்ந்த பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் மாகாணப் பணிப்பாளர் வெள்ளிக்கிழமை வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசினார். உயிரிழந்த கால்நடைகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் பண்ணைகளை முறையாகப் பதிவு செய்து மாடுகளுக்கான காது எண் களைப் பெற்றிருந்தவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

''இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்று எமது துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அவர் அதனைச் சாதகமாகப் பரிசீலித்து, அமைச்சரவைப் பத் திரத்தைத் தயார்ப்படுத்தி வருகின்றார். அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் இழப்பீடுகளை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்'' என்றார் மருத்துவர் வசீ கரன்.

கால்நடைகள் இருந்ததற்கான அடையாளங்களோ அவை இறந்ததற்கான அடையாளங்களோ இல்லாதவர் களுக்கு இழப்பீடுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்றும் அவர் தெரிவித்தார்.

உயிரிழந்த மாடுகளில் பெரும்பாலானவை பதிவு செய்யப்படாத திறந்தவெளி மேய்ச்சல் நில மாடுகள் என்று பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். அவையே தமது வாழ்வாதாரமாக இருந்த காரணத்தால் பதிவு செய் யப்பட்ட மாடுகளுக்கு மட்டுமன்றி ஏனைய மாடுகளுக் கும் இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பெரும்போக நெற்செய்கைக் காலப்பகுதியில் வயல் நிலங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு தூர இடத்து திறந்த வெளிகளுக்குக் கொண்டு செல்லப்படும் திறந்த வெளி மேய்ச்சல் நில மாடுகளே கடும் குளிரின்போது பெரும்பாலும் இறந்துள்ளன என்று அதிகாரிகள் கூறுகின் றனர். கொட்டில் முறையில் நன்கு பராமரிக்கப்படும் நல்லின மாடுகளின் இறப்புக்கள் இந்தக் காலநிலையில் மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

''பெரும்போகக் காலத்தில் இந்த மேய்ச்சல் நில மா- டுகளுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. அதனால் அவற்றின் உடலில் குளிரைத் தாங்கக்கூடிய கொழுப்புப் படிவு இருக்கவில்லை. இதனாலேயே குளிர் அதிர்ச் சியினால் அவை இறந்துள்ளன. கடந்த 25 வருடங்களில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டிருப்பது இதுவே முதல் முறை'' என்று வசீகரன் தெரிவித்தார்.

கால்நடைகளின் இந்த இறப்பையடுத்து வடக்கில் கட் டாக்காலியாகத் திறந்த நில மேய்ச்சல் மூலம் வளர்க்கப் படும் மாடுகள் தொடர்பில் கட்டுப்பாட்டு நடவடிக்கை களை மேற்கொள்வது குறித்தும் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். விரைவில் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் இறைச்சித் தேவையில் 65 சதவீதம் வடக்கு கிழக்கில் இருக்கும் கால்நடைகள் மூலமே பூர்த்தி செய்யப்பட்டு வரும் நிலையில் பெரும் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள இந்த இறப்புகள் வரும் நாட்களில் இறைச்சி விலை அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என்றும் எதிர்பார்க் கப்படுகின்றது.

# லவ் டுடே

## அநாகரீகம், ஆபாசம்

ராஜன் கு.கிருஷ்ணன்

> "அந்தரங்கம் என்றாலே அது கட்டற்ற பாலியல் இச்சையின் களம் என்ற தவறான புரிதலும் இங்கே பரவலாக இருக்கிறது"



வணிக ரீதியாக வெற்றி அடைந்துள்ள 'லவ் டுடே' திரைப்படம் பலராலும் பாராட்டப்படுகிறது. இதற்கு முக்கியமான காரணம், நம் வாழ்வில் இன்று முக்கியமான அங்கமாகிவிட்ட செல்பேசியின் பயன்பாட்டை அந்தப் படம் விவாதிப்பதுதான். குறிப்பாக இளைய தலைமுறையானது செல்பேசியுடன் முழுமையாகத் தன்னைப் பிணைத்துக்கொண்டிருப்பது முடிவற்ற பட்டிமன்ற விவாதப் பொருள் ஆகியுள்ளதை அறிவோம்.

உள்ளபடி சொன்னால் செல்பேசி கடந்த பத்தாண்டுகளில் சமகால வாழ்வில் மிகப் பெரிய, புரட்சிகர மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் குறிப்பாக வாட்ஸப், ட்விட்டர் உள்ளிட்ட தகவல் பரிமாற்றத் தளங்களின் பயன்பாடு அந்தரங்க வாழ்விலிருந்து, உலக அரசியல் வரை மிகப் பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளது. இவை ஏற்படுத்தியுள்ள, ஏற்படுத்திவரும் தாக்கத்தைத் தத்துவார்த்த மானுடவியல் கோணத்தில் மதிப்பிட இன்னும் சில பத்தாண்டுகள் தேவைப்படும். ஏனெனில், மிக விரிவான சமூகப் பரப்பில் ஆழமான மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன என்பதே உண்மை.

அத்தகைய மாற்றங்களில் முக்கியமானது, பெண்களுக்குக் கிடைத்திருக்கும் புதிய மெய்நிகர் (virtual) சமூகவெளி. குறிப்பாக அது பாலியல் சமன்பாடுகளில் (gender equations) எதிர்பாராத மாறுதல்களை உருவாக்கிவருகிறது. இதுநாள் வரை சமூகத்தில் பெண்களுக்குக் கிடைத்திராத ஒரு புது வகை உறவின் சாத்தியம், அதாவது நேரில் சந்திக்காமலேயே நட்புகொள்ளும் சாத்தியம் பெரியதொரு மாற்றத்தை அவர்கள் அந்தரங்க வாழ்வில் ஏற்படுத்தி வருகிறது. இந்தப் புதுவெள்ளத்தில் நல்லதும், தீயதும் கலந்துதான் வரும்.

செல்பேசியின் மூலம் உருவாகும் ஓர் அந்தரங்க சுயம், மெய்நிகர் உலகில் அதன் வெளிப்பாடு என்பதற்கும் அன்றாட வாழ்க்கையில் அதே நபர் ஏற்படுத்திக்கொள்ளும் உறவுகளுக்கும் நிலவும் இடைவெளி, வேறுபாடுகள், பூடகத் தொடர்புகள் எல்லாமே ஆய்விற்கும் சிந்தனைக்கும் உரியவை. 'லவ் டுடே' திரைப்படம் இந்த முக்கியமான, சுவாரஸ்யமான ஒரு களத்தைத்தான் சித்தரிக்க முயல்கிறது.

**பிரச்சினை என்ன?**

சிக்கல் என்னவென்றால், 'லவ் டுடே' திரைப்படத்தால் பெண்களுக்கு எதிரான பழைய ஆணாதிக்க மனோபாவத்தைக் கடந்து சிந்திக்க முடியவில்லை. அது மட்டுமின்றி செல்பேசிப் பயன்பாட்டில் வெளிப்படும் மனோ விகாரங்கள், ஆபாச செயல்பாடுகள், அநாகரீகங்களை அது சரியான கோணத்தில் கண்டிப்பதற்குப் பதிலாக அவற்றை நகைச்சுவையாகச் சித்தரித்து இயல்பாக்கம் செய்துவிடுகிறது. 'இந்தக் காலத்துப் பசங்க இப்படித்தான்' என்ற எண்ணத்தை உருவாக்குவது மிகவும் ஆபத்தானது. கடுமையான விமர்சனத்திற்கு உரியது.

**அந்தரங்கம் என்பது என்ன?**

நவீன வாழ்வின் அச்சாரமே சுதந்திரமான தனிநபர் என்பது தான். அந்தத் தனிநபரின் உரிமைகள், தேவைகள் ஆகியவற்றை அனுசரித்து, அவர்கள் மனோதர்மத்தின்படி வாழ்வதற்கான சூழலைச் சமூகம் தருவது ஆகியவையே நவீன விழுமியங்கள்.

ஜாதியோ, மதமோ, குலமோ, கோத்திரமோ, சடங்கு சம்பிரதாயங்களோ, மரபுகளோ எதுவுமே அவர்கள் சுதந்திரத்தை மட்டுப்படுத்தக் கூடாது. அதன் ஒரே எல்லை இன்னொரு நபரின் சுதந்திரத்தில் தலையிடாமல், மட்டுப்படுத்தாமல் இருப்பதுதான். 'வாழு, வாழவிடு' என்று சுருக்கமாகக் கூறலாம்.



**அந்தரங்கத்தின் மீதான தாக்குதல்**

இத்தகைய தனிநபரின் விருப்பு, வெறுப்புகள், ஆசைகள், விழைவுகள், உணர்வுகள் எல்லாம் அந்தரங்கமானவை என்பது இதன் உப விளைவு, ஆதாரம். ஐரோப்பாவில் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் டைரி எனப்படும் நாட்குறிப்புகளை எழுதுவதில் இது முதலில் வெளிப்பாடு கண்டது. ஒருவரது அந்தரங்க நாட்குறிப்பை மற்றவர் படிப்பது என்பது இந்த நவீன அந்தரங்கத்தின் புனிதத்தைச் சீர்குலைப்பதாகும். பிறர் டைரி கையில் கிடைத்தாலும் படிக்காமல் இருப்பதே உயர் ஒழுக்கம், சீலம் என்று போற்றப்படும்.

ஜெயகாந்தன் 1960களில் 'அந்தரங்கம் புனிதமானது' என்று ஒரு சிறுகதை எழுதினார். சென்னையில் வாழும் கல்லூரி பேராசிரியர் சுந்தரம், அவருடன் கல்லூரியில் படித்த நாகரிகமான வேறொரு ஜாதியைச் சேர்ந்த பெண்ணை மணந்துகொள்வார். அதனால் கோபித்துக் கொண்டு உறவைத் துண்டித்த சுந்தரத்தின் தந்தை கணபதியாப் பிள்ளை, பேரன் பிறந்ததும் புதுப்பித்துக் கொள்வார். தானே பேரனை வளர்ப்பதாகக் கோரி கூட்டிச் சென்றுவிடுவார்.

தாத்தா பாட்டியுடன் மரபார்ந்த சூழலில் வளர்ந்த மகன் வேணு, கல்லூரிப் படிப்பு முடிந்ததும் பெற்றோருடன் வாழ வருவான். அவர்களது நாகரீக வாழ்வு அவனுக்கு அசூயையைத் தரும். அதற்கு சிகரம் வைத்தாற்போல் தந்தைக்கு வேறொரு பெண்ணுடன் நட்பு இருப்பது அவனுக்குத் தெரியவரும். தந்தையின் அறைக்குச் சென்று அவர் மேஜையைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து அந்தப் பெண்ணின் காதல் கடிதங்களை எடுத்து விடுவான். அதை ஆதாரமாகக் கொண்டு தந்தையைக் குற்றஞ்சாட்டுவான்.

இந்த விஷயத்தில் அவன் தந்தை, தாய் இருவருமே, "நீ ஏன் தந்தையின், பெற்றோரின் அந்தரங்க வாழ்வில் தலையிடுகிறாய்?" என்று அவனைத்தான் கண்டிப்பார்கள். தந்தையின் அந்தரங்கக் கடிதங்களை அவன் எப்படி படிக்கலாம் என்று கேட்பார்கள். வேணுவுக்கு அவர்கள் நாகரீக சிந்தனை புரியாமல் ஊருக்கே திரும்பிப் போய் விடுவான்.

ஜெயகாந்தன் இந்தக் கதையில் அந்தரங்கம் என்ற நவீன விழுமியத்தை முன்னிலைப்படுத்தி, சுந்தரத்தின் பெண் உறவு அவருக்கும், அவர் மனைவிக்கும் இடையிலான பிரச்சினையே தவிர அதில் பிறர் தலையிடக் கூடாது என்பதை வலியுறுத்துகிறார். மேலும், அவர் மனைவியே கணவனைக் கண்காணிப்பதோ கேள்வி கேட்பதோ இல்லை.

**ஆபாசம்**

அந்தரங்கம் என்றாலே அது கட்டற்ற பாலியல் இச்சையின் களம் என்ற தவறான புரிதலும் இங்கே பரவலாக இருக்கிறது. இயக்குநர் வசந்த் எடுத்த 'சிவரஞ்சினியும் மற்றும் சில பெண்களும்' படத்தில் ஒரு கதையில் பெண் டைரி எழுதுவதே பிரச்சினை ஆகும். அவள் ஏன் ரகசியமாக ஏதோ எழுதி வைத்துக்கொள்ள வேண்டும் என்று குடும்பம் கேட்கும். இதுபோன்ற தருணங்களில் அந்தரங்கம் என்பது ரகசியம் எனக் கருதப்பட்டு ரகசியம் விதிமீறலுடன், ஆபாசத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

இப்படித்தான் 'லவ் டுடே' திரைப் படத்திலும் யோகி பாபு அவர் செல் பேசியை யாரிடமும் தர மறுப்பது அவரை சந்தேகத்திற்கு உரியவராக மாற்றுகிறது. அதற்குக் காரணம் படத்தின் கதாநாயகன் பிரதீப் செல் பேசி வழி பல முறையற்ற செயல்க ளில் ஈடுபடுகிறான். அவனது குற்ற முள்ள மனம்தான் யோகி பாபுவை சந்தேகிக்கக் காரணம் ஆகிறது.

கதாநாயகன் பிரதீப் பழக்கமில் லாத பெண்களிடம் திரைப்படம் எடுக்கப்போவதாகக் கூறி அவர்களை பலவிதமான ஆடைகள் அணிந்து புகைப் படம் எடுத்து அனுப்பச் சொல்கிறான். இது மிகவும் அருவருக்கத்தக்க, ஆபாசமான ஒரு மனப்பான்மை. பெண் உடலைப் பண்டமாக்கி நுகரும் சிறுமை.

மேலும் ஒரு ஃபேக் ஐடியை ஒரு பெண்ணின் பெயரில் உருவாக்கி அதனை அவன் நண்பர்கள் அனை வரும் பகிர்ந்துகொள்கிறார்கள். அதை அவர்கள் சைபர் கிரைம் எனும் வரை யறைக்குள் வரும் பல குற்றச்செயல்க ளுக்கும் பயன்படுத்துகிறார்கள். பெண்களுக்கு ஆபாசமான செய்தி கள் அனுப்புகிறார்கள். கதாநாயகி யின் தங்கைக்கே அப்படிப்பட்ட செய்திகள் அந்த ஐடியிலிருந்து வருகின்றன. பிரதீப் அவற்றை தான் அனுப்பவில்லை என்று சொல்கி றானே தவிர, இப்படி ஒரு ஃபேக் ஐடியை ஏன் நண்பர்களின் குற்றவி யல் கேளிக்கைகளுக்காகப் பகிர்ந் துகொள்கிறான் என்பது கேள்விக்கு உட்படுத்தப்படுவதில்லை.

**அநாகரீகம்**

இந்தப் படத்தின் ஒன்லைன் எனப் படும் கதையின் மைய இழையே தவறாக இருக்கிறது. ஜெயகாந்தன் சுட்டிக்காட்டிய அந்தரங்கத்தில் தலையிடாமை என்ற விழுமியத்திற்கு நேர் எதிராக சத்யராஜ் தன் பெண் ணையும், அவளை காதலிக்கும் இளை ஞனையும் ஒருவர் அந்தரங்கத்தில் மற்றவர் நுழைந்து பார்க்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார்.

இதற்கு சத்யராஜ் கூறும் காரணம் ஒருவரை ஒருவர் முழுமையாக 'பார்க்க' வேண்டும், அதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான். இது முற்றிலும் பிழையான கருத்தா கும். சுயம் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியதே அது ஏதோ பெட்டியில் வைத்து பூட்டப்பட்ட பொருள் அல்ல என்பதுதான். சுயம் என்பது இயக்கபூர்வமானது. அறி யப்பட்ட பிரபஞ்சத்தினைக் கடந்து செல்லும் கருந்துளை. யாரும் யாரை யும் முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியாது. அவசியமும் இல்லை. நம் பிக்கையும், காதலும்தான் வாழ்க்கை.

இறுதியில் 'லவ் டுடே' படமும் அதைத்தான் சொல்கிறது. நம்பிக்கை யும், காதலும்தான் வாழ்க்கை என்கி றது. ஆனால், நடுவில் பிறருடைய வாட்ஸப்பைப் படித்துப் பார்க்க வேண் டும் என்கிறது. சத்யராஜ் அவர் விதித்த அநாகரீகமான நிபந்தனைக்கு வருந்துவதே இல்லை. படம் பார்ப்பவர்க்கும் இளைஞர்களுக்கும் வாட்ஸப்பில் 'பலான மேட்டர்' இருக்கும் என்ற எண்ணமே தோன் றும்படிதான் எடுக்கப்பட்டுள்ளது. புரிதலை அல்ல சந்தேகத்தையே விதைக்கிறது படம்.

இதைவிட மோசம் பாலியல் சம மின்மை. கதாநாயகியின் வாட்ஸப் பில் கிடைக்கும் ரகசியம் அவள் தொடர்ந்து தன் எக்ஸ் எனப்படும் முன்னாள் காதலனான ஆண் நண்ப னுடன் வாஞ்சையாகப் பேசிக்கொண் டிருந்தாள், அந்த நண்பனுடன் இரவில் காரில் தொலைதூரப் பய ணம் செய்தாள் என்பதுதான். அது கதாநாயகனுக்கு மிகப் பெரிய மன உளைச்சலைத் தருகிறது. அவளிடம் மிருகத்தனமாக அவள் பாலியல் உறவுகொண்டாளா என்று பச்சை யாகக் கேட்கிறான்.

நேர் எதிராகக் கதாநாயகனைப் பற்றி கிடைக்கும் ரகசியம் என்ன வென்றால், அவன் பெண்களிடம் பொய் பேசி அவர்கள் டிரைபல் (?) ஆடைகள் அணிந்த புகைப்படங்க ளைச் சேகரித்து பார்த்து மகிழும் வக்கிரம் பிடித்தவன் என்பது. ஃபேக் ஐடி உருவாக்கி பல குற்றச்செயல்க ளுக்கு வழி வகுப்பவன் என்பது.

ஆனால், இறுதியில் இரண்டும் ஒன்றுதான் என்று சமன் செய்யப் படுகிறது. கதாநாயகின் முகத்தை ஓர் உடலுறவுக் காணொளியில் ஒருவன் மார்ஃப் செய்து வெளியிட, அனைவரும் அவளை அருவெறுக்கி றார்கள். கதாநாயகன் அது அவளல்ல என்று நம்புகிறான். அவன் நண்பர் கள் மார்ஃபிங் செய்தவனைக் கண்டுபிடித்துவிடுகிறார்கள்.

எத்தனை ஆபாசமான செயல்க ளைச் செய்தாலும், அநாகரீகமான செயல்களைச் செய்தாலும் கதாநாய கன்தான் கதாநாயகியைக் காப்பாற்ற வேண்டும் என்பதால், பெண்களின் சார்புத்தன்மையை இந்தப் படம் நிலைநிறுத்துகிறது. அதற்கு அடுத்த படி அவர்கள் மெய்நிகர் உலகில் புழங்குவதே ஆபத்தானது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது (நாளைக்கு கட்டிக்கப் போறவனுக்கு தெரிஞ்சா?)

ஆங்கிலத்தில் மிசோஜினி (misogyny) என்று ஒரு வார்த்தை உண்டு. தமிழில் பெண் வெறுப்பு எனலாம்.

வெறுப்பு என்றால் பிடிக்காது என்ற பொருளில் அல்ல. பெண்களின் சுதந்திரத்தை வெறுப்பது, அவர் களை ஆணுக்குக் கீழ்படிந்த நிலை யில் வைத்திருப்பது ஆகியவையும் தான். 'லவ் டுடே' நகைச்சுவை, சமகால இளைஞர்கள் உளவியல் என்ற பெயரில் பெண் வெறுப்பை இயல்பானதாக சித்தரிப்பது தவறா னது.

இதுபோன்ற கதையாடல்கள் பெண்களை மெய்நிகர் வெளியிலி ருந்து விலக்கும் அபாயம் கொண் டவை என்ற விழிப்புணர்வு பெண் களுக்கும் வேண்டும் ஆண்களுக்கும் வேண்டும்!



# ஏன்...?
# அப்படி...?

நட்சத்திரா

41



# பல்லி பீச்சியதால் வாயில் வந்த புண்

அதிகாலை தூக்கத்தால் எழும்போது வாயில் - உதட்டோரத்தில் சிறிய சிறிய புண்கள் திடீரென்று ஏற்பட்டிருக்கக் கண்டு கலங்கிய அனுபவம் உங்களுக்கு உண்டா...? ஆம் உங்களில் பலருக்கு அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். முதல் நாளோ... ஏன் அன்றிரவு படுக்கைக்குப்போகும்போதோகூட வாயில் புண் ஏற்படுவதற்குரிய எவ்வித அறிகுறிகளும் இல்லாதிருக்கத் திடீரென அந்தப் புண்கள் வந்திருக்கும். அதற்குக் காரணம் தூங்கிக் கொண்டிருக்கும்போது வாயில் பல்லி சிறுநீர் கழித்துவிட்டது என்றோ பல்லி எச்சம் போட்டுவிட்டது என்றோ வீட்டில் சொல்வார்கள். அது உண்மைதானா...? வாய் ஓரத்தில் திடீரென வருகிற அந்தப் புண்களுக்குக் காரணம் அன்றிரவு நாம் தூக்கத்தில் இருந்தபோது பல்லி எச்சமிட்டதுதானா...?

பழங்காலத்து வீடுகளில் பல்லிப் புழக்கம் அதிகம் இருப்பது என்னவோ உண்மைதான். அதனாலோ என்னவோ திடீரென்று வந்த புண்ணுக்குக் காரணம் பல்லிதான் என்று முன்னோர்கள் முடித்திருந்தனர். பல்லி எச்சமிட்டாலோ சிறுநீர் கழித்தாலோ அவிச்சல் அல்லது புண்கள் ஏற்படுமா என்பது ஆய்வுக்குரியது. ஆனால், தூங்கி எழும்போது வாயில் கொப்பளங்கள் ஏற்பட்டு அவை பின்னர் புண்களாகிவிடும். இதற்குக் காரணம் பல்லியில்லை. அதற்குக் காரணம் ஹெர்பெக்ஸ் சிம்லெக்ஸ் என்கிற ஒரு வகை வைரஸ் என்பதே உண்மை. இந்த வைரஸ் தாக்கம் காரணமாகவே அக்கி போன்ற அவியல் தன்மைபோன்ற சிறிய புண் வாய் ஓரத்தில் ஏற்படுகிறது. இந்த வாய்ப்புண்ணுக்குக் காரணம் இந்த வைரஸ்தான். பல்லி அல்ல.

# நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்



## வெறும் பழசு

நகைச்சுவைப் பெரு நடிகரான வடிவேலுவின் திரைஉலக மீள்கைக்கான பெரும் எதிர்பார்ப்புடன் வந்த திரைப்படம் 'நாய் சேகர் ரிட்டன்ஸ்'. அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்குப் பதில் வடிவேலுவின் முந்தைய படங்களின் தனித்துவக் காட்சிகளின் தொகுப்பு தொலைக்காட்சி நிகழ்ச்சிபோன்ற ஒன்றைத் தயாரித்துள்ளது லைகா நிறுவனம்.

பணக்கார வீட்டு நாய்களை குறிவைத்துக் கடத்தி அதன் உரிமையாளர்களிடம் பணம் பறிக்கும் 'நகைச்சுவை' கடத்தல் மன்னன் நாய் சேகர் (வடிவேலு). இடையில் உண்மையான ரவுடி ஒருவரின் நாயைக் கடத்தி சிக்கலில் மாட்டிக்கொள்கிறார். அதன் பின்விளைவுகளுக்குப் பயந்து ஊரைவிட்டு கிளம்பலாம் என நினைக்கும்போது, அவரது குடும்பத்துக்கு நல்லது செய்த சொந்த நாயையே ஒருவர் கடத்தி வைத்து, அதன் யோகத்தால் கோடிகளில் புகழடைந்திருப்பதை அறிந்து, அதை மீட்க புறப்படுகிறார். இறுதியில் தனது நாயை நாய் சேகர் மீட்டாரா? இல்லையா? அதற்கிடையில் அவருக்கு வந்த பிரச்சினைகளை எப்படி சமாளித்தார்? - இதுதான் படத்தின் திரைக்கதை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு திரையில் மீண்டும் வடிவேலு. பார்வையாளர்கள் பார்த்துப் பார்த்து ரசித்து குலுங்கி சிரித்த தனது தனித்துவ உடல் மொழியை வார்த்திருக்கிறார். தனக்கான உடல் மொழியை வெளிப்படுத்தியபடி வடிவேலு நடந்து வருவது, வசனமற்ற காட்சிகளிலும் தனது முகபாவனையால் சிரிக்க வைக்க முயற்சிப்பது, ஆங்கிலம் பேசும் அந்த பாணி, என ஈர்க்க முயற்சிக்கிறார்.

ஆனாலும், எல்லாமே இதற்கு முன்னர் வந்த படங்களில் வடிவேலுவின் தனிச் சிறப்புக் காட்சிகளை மீள உருவாக்கியது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றனவே தவிர, இயல்பான அந்த வடிவேலுவையும் நடிகர்களைக் கிறங்கடிக்கும் அந்த நடிப்பையும் காணோம். போதாததற்கு வடிவேலுவின் முகத்தில் வேறு ஒருவித வயோதிப இயலாமை எட்டிப்பார்க்க வைத்துச் சலிப்பூட்டுகின்றது.

ஆனந்த்ராஜ் நகைச்சுவை வில்லன். ரிட்டையர்டு ரவுடியை வைத்து, டம்மி கூட்டாளிகளுடன் அவர் நடத்தும் 'கடத்தல்' தர்பார் பல இடங்களில் ரசிக்க வைக்கிறது. இரண்டாம் பாதியில் வரும் ராவ் ரமேஷின் நடிப்பு கவனம் பெறுகிறது. ரெடின் கிங்க்ஸ்லீ வழக்கமான தனது பாணியில் சில இடங்களில் புன்முறுவலையும், ஒரு சில காட்சிகளில் சத்தமாக சிரிக்கவும் வைக்கிறார். செட்ப்ராபர்டிகளாக வருகிறார் ஷிவாங்கி. பிரசாந்தை முதல் பாதியுடன் முடித்து அனுப்பும் இயக்குநர் அந்த இடத்தில் இரண்டாம் பாதிக்கு ஷிவானியை தேர்ந்தெடுத்துள்ளார். தவிர முனிஷ்காந்த், லொள்ளு சபா ஷேஷூ, கேபிஒய் ராமர், கேபிஒய் பாலா, லொள்ளு சபா மாறன், மனோபாலா தேவையான நடிப்பை பதிவு செய்கின்றனர்.

சுராஜ் இயக்கியிருக்கும் இப்படத்தின் முதல் பாதி திரைக்கதையில் நகைச்சுவை வறட்சி தலைவிரித்தாடுகிறது. சிரிப்பை எதிர்நோக்கி காத்திருக்கும் பார்வையாளர்களுக்கு ஆனந்த்ராஜ் திரையில் தோன்றுவது சற்று ஆறுதல். மற்றபடி,



# விட்னஸ்

## தமிழகத்தின் கண்ணாடி

மலக்குழியில் இறங்க நிர்பந்திக்கப்பட்டு உயிரிழந்த தன் மகனின் இறப்பிற்கு நியாயம் கேட்க அதிகாரத்தை எதிர்க்கும் தாயின் போராட்டம்தான் 'விட்னஸ்'.

தூய்மைப் பணியாளரான இந்திராணி (ரோஹினி) தனது மகன் பார்த்திபனுடன் வாழ்ந்து வருகிறார். கட்டாயப்படுத்தப்பட்டு மலக்குழியில் இறக்கி விடப்பட்ட மகன் பார்த்திபன் உயிரிழப்பது தெரிய வர, உடைந்து போகிறார் இந்திராணி. இதற்கு காரணமான வர்களைத் தண்டிக்கச் சட்டத்தின் துணை கொண்டு அதிகாரத்தை எதிர்க்கத் துணியும் அவரது போராட்டம் இறுதியில் வென்றதா? இல்லையா? இதுதான் படத்தின் திரைக்கதை. தீபக் இயக்கியிருக்கும் இப்படத்திற்கு முத்துவேல், ஜே.பி. சாணக்யா திரைக்கதை எழுதியுள் ளனர்.

நடக்கும் நிகழ்வுகளை பக்கத்தில் நின்று பார்ப்பது போன்ற உணர் வுகளை கட்டியெழுப்பி கூர்மையான உரையாடலை யதார்த்தமான காட்சிகளின் வழியே பேச முனைந்திருக்கிறார் இயக்குநர் தீபக். அவர் பேச எத்தனிக்கும் அந்த உரையாடல் பரப்புரைத்தன்மையற்று, ஆவணப்படுத்தலிற்கான சாரத்திலிருந்து விலகி காட்சிப் படிமமாகத் தேங்கியிருப்பது தேர்ந்த திரைக்கதை வடிவம். வகுப்பெடுக்கும் வசனங்களற்று, 'மீட்பர்' இல்லாத கதாபாத்திரங்கள், திரை சமரசத் திற்காக வைக்கப்படும் பொய்யான வெற்றி என இதிலேதும் சிக்காத திரைக்கதை புதுமை.

வசனங்களின் வழி வலியைக் கடத்தி அயற்சியைத் தூண்டாமல், அதற்கு மாற்றாக கதாபாத்திரங்களின் நடிப்பை முதலீடாக்கி காட் சிக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தது பார்வையாளர்களுக்கு இயக் குநர் கடத்த நினைக்கும் உணர்வுகளுக்கான கச்சிதமான மொழி.

வடிவேலு நாய் கடத்துபவர் எனக் காட்ட நினைத்து வைக்கப்பட்ட பெரும்பாலான காட்சிகள் உப்பு சப்பில்லாதவை. ஆனந்த்ராஜ் - வடிவேலு நேருக்கு நேர் சந்திக்கும் காட்சிகள் சுவாரஸ்யம். நிறைய நகைச்சுவை நடிகர்கள் இருந்தும் அவர் களால் திரைக்கதைக்கு தேவையான நகைச்சுவையைக் கொடுக்க முடியா ததாலும், அழுத்தமில்லாத காட்சிக ளாலும் வடிவேலுவால்கூட முதல் பாதியைக் காப்பாற்ற முடியவில்லை.

'கொண்டைக்கு கோகனேட் ஆயில்', 'நீங்க டாக்டரா டையலாக் ரைட்டரா', 'பங்களாவா இங்க இருக் காரு பாரு சிங்கிளா' என ரைமிங் டயலாக்குகள் சில இடங்களில் கைகொடுக்கின்றன. இரண்டாம் பாதியில் கண்தெரியாத மாற்றுத் திறனாளியாக ஸ்கோர் செய்கிறார் வடிவேலு. இடையில் வரும் பாஸ் வேர்டு காமெடியும், க்ளைமாக்ஸும் சிரிப்பலையை எழுப்புகின்றன. இதைத்தாண்டி படத்தில் பெரிய அளவில் சிரிக்கவோ, ரசிக்கவோ, அழுத்தமான திரைக்கதைக்கோ எந்த இடத்திலும் இடமளிக்காதது செல்பேசியை கையிலெடுக்க தூண் டுகிறது.

'அப்பத்தா' பாடலுக்கான பின் னணி இசையைப் பெரும்பாலான இடங்களில் பிணைத்து, நகைச் சுவைக் காட்சிகளுக்கான இசையை தேவைக்கேற்ப கொடுத்திருக்கிறது சந்தோஷ் நாரயணனின் ரசிகத் தன்மை. வடிவேலுவுக்கான ஆடை கள் தேர்வு கிட்டத்தட்ட 'ஒரு கல் ஒரு கண்ணாடி' சந்தானத்தின் உடைத் தேர்வை நினைவுபடுத்தியது.

வடிவேலு தன்னால் முடிந்த நடிப் பையும், உழைப்பையும் செலுத்தியி ருப்பது பளிச்சிடுகிறது. ஆனால், அவரை இன்னும் பயன்படுத்தியிருக் கலாம் எனத் தோன்றுகிறது. குறிப் பாக மொத்தப் படமும் முழுமை யற்று ஒரு சில நகைச்சுவைக் காட் சிகளை மட்டும் பார்த்த உணர்வைத் தருகிறது. தவிர கதையாகவோ, திரைக்கதையாகவோ எந்த இடத் திலும் அழுத்தம் மேலோட்டமாக நகரந்தது பலவீனமான எழுத்தை உறுசெய்கின்றன.

மொத்தத்தில் வடிவேலுவின் 'நாய் சேகர்' பார்வையாளர்கள் மனதில் நீங்கா இடத்தில் நிலை கொள்ளும் எனக் கருதினால், அது சில நகைச்சுவைக் காட்சிகளைத் தாண்டி பெரிய அளவில் ஆட்கொள் ளாமல் கடந்திருக்கிறது.



குறிப்பாக மலக் குழிக்குள் கட்டா யப்படுத் தப்பட்டு இறக்கப்படும் பார்த்திபன் தேர்ந்த நீச்சல் வீரன். அதன் வழி நீருக்குள் மூச்சை அடக்கும் திறன் கொண்ட ஒருவ ரால் கூட மலக் குழியில் தாக்குப் பிடிக்க முடியா ததை, சாமானியன் ஒருவரின் நிலை யுடன் மறைமு கமாக ஒப்பிட்டது நுணுக்கம்.



அதேபோல, எங்கேஜிங் திரைக்கதையில் படம் நிகழ்த்த முயலும் உரையாடல் அழுத்தமானது. படத்தின் சங்கிலி இறுதியாய் ஒரு கட்சியுடன் சென்று முடியாமல், அதிகார அடுக்குகளுக்கும் அதற்கு காரணமாக இருக்கும் சாதியையும் எதிர்த்து கேள்வி கேட்கிறது. செம்மஞ்சேரியில் குற்றவாளிகள் இருப்பதாக சித்தரிக்கும் காவல்துறையின் போக்கு, தூய்மைப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை, மேலிடத்தில் அவர்களுக்கு கொடுப்படும் அழுத்தம், கம்யூனிஸ்ட்டுகளின் களப் போராட்டங்கள், சென்னையிலிருந்து புறநகர்களுக்கு தூக் கியடிக்கப்படும் ஒடுக்கப்பட்ட மக்கள், தொழிற்சங்கமாக ஒன்றிணை வதன் முக்கியத்துவம் என படம் பேசும் அரசியல் முக்கியமானது.

தவிர, மறைமுகமாகச் சென்னையை ஒரு கதாபாத்திரமாக்கியிருப்பதும், பெண்கள் சார்ந்து கதை நகர்வதும், வர்க்க நிலை ஒருபோதும் சாதியின் கோரத்திலிருந்து விடுபட வைக்காது என்பதையும் அழுத்தமாக பதிவு செய்கிறது படம்.

'உன் கை நீளலாம்; என் வாய் நீளக்கூடாதா', 'கொடுக்குற காசு கூரைய பிச்சி கொட்டுது லீவு போட' என வசனங்களில் சீறும் ரோஹினி மிகையில்லாத யதார்த்த மான நடிப்பில் ஈர்க்கிறார். மகனை இழந்து வாடும் காட்சிகளை வசனங்களின்றி கடத்த இயக்குநருக்கு நம்பிக்கையளித்திருக்கிறது அவரது நடிப்பு. அத்தனை சோகம் அந்த முகத்தில்!

ஸ்ரத்தா ஸ்ரீநாத் குறைந்த நேரம் வந்தாலும் அதற்கு நியாயம் சேர்க்கும் நடிப்பை பதிவு செய்கிறார். உண்மையான களப்போராளியான ஜி.செல்வா திரை யிலும் நடிப்பால் களமாடி கவனம் பெறுகிறார். தவிர சண்முக ராஜா, அழகம் பெருமாள், சுபத்ரா ராபர்ட், ராஜீவ் ஆனந்த் உள்ளிட்டோர் தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

சமூகத்தின் முன்னே ஒரு கண்ணாடியை நிறுத்தி, அதில் நடக்கும் சம்பவங்களை பிரதிபலிக்கும் வகையிலான படத்தின் ஒளிப்பதிவும், அதற்கேற்ற ரமேஷ் தமிழ் மணியின் பின்னணி இசையும், கதையோட்டதுடன் கலக்கும் பாடல்களும் முழுமையான காட்சி அனுபவத்திற்கு உதவுகின்றன.

மலக்குழி இறப்புகள், அதன் மீதான அதிகார வர்க்கத்தின் அலட்சியப்போக்கு, அதற்கு காரணமாகவும் சாதிய வேர், சுவாரஸ்யமான நீதிமன்ற உரையாடல்கள், எதிர்பாராத உச்சக்காட்சி என அழுத்தமான திரைக்கதையால் சாதிய மலக்குழி இறப்புகளை நிகழ்த்தும் அதிகார வர்க்கத்திற்கு சவுக்கடி கொடுத்திருக்கிறது 'விட்னஸ்'. சோனி லிவ் ஓடிடி தளத்தில் காணக்கிடைக்கிறது.

# வரலாறு முக்கியம்

## பிற்போக்குத்தனம்!

கோயம்புத்தூரில் ஸ்கூல் வாத்தியாராக இருக்கும் கோபால் (கே.எஸ்.ரவிக்குமார்) மகன் கார்த்தி (ஜீவா). வேலையில்லாமல் சுற்றித் திரியும் அவருக்கு முழுநேர வேலையே பெண்களை வதை செய்வதுதான். அதை பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் கார்த்தியின் தெருவில் கேரள பெண் ஒருவர் குடியேற, அவரை துரத்தித் துரத்தி காதலிக்கத் தொடங்குகிறார். இறுதியில் அவரை கரம் பிடித்தாரா? இல்லையா? என்ற படுபழைய கதைதான் 'வரலாறு முக்கியம்'.

பாகவதர் காலம் தொட்டு எடுக்கப்பட்ட இந்தக் கதையை 2022ஆம் ஆண்டிலும் படமாக்கியிருக்கும் இயக்குநரின் மன தைரியம் பாராட்டத்தக்கது. முன்பு கொண்டாட்டப்பட்ட இந்தக் கதைக்களத்திலிருந்து தமிழ் திரைத்துறை விலகி தற்போதுதான் விழித்தெழுத்துள்ளது. அதை இழுத்து மீண்டும் பிற்போக்குத்தனத்திற்கு வழிவகுக்கும் படமாக உருவாகியுள்ளது 'வரலாறு முக்கியம்'.




சந்தோஷ் ராஜன் இயக்கியிருக்கும் இப்படம் மதம் பிடித்த யானையாக திசையின்றி அலைந்து பெயரளவுக்குகூட சுவாரஸ்யமற்று நகர்கிறது. "அம்மா நீங்க என்ன செவ்வா கிரகத்துக்கு அனுப்புறீங்கன்னு பேசுனீங்க. சோ நான் வீட்ட விட்டு வெளியே போறேன்" என ஜீவா கோபித்துக்கொண்டு சொல்லும் காரணமும் அந்தக் காட்சியும் அடடே! தற்கொலை செய்துகொள்ளலாம் போலுள்ளது.

விடிவி கணேஷ் கதாபாத்திரம் நகைச்சுவை என்ற பெயரில் ஆபாசங்களுக்காக மட்டுமே படம் முழுக்க பயன்படுத்தப்பட்டுள்ளதைப் படத்தைப்போல ரசிக்க முடியவில்லை. ஷாரா, மொட்ட ராஜேந்திரன் கதாபாத்திரங்கள் வீண். கே.எஸ்.ரவிக்குமார், சரண்யா பொன்வண்ணன் இருவரும் தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்துகின்றனர். நாயகிகள் காஷ்மீரா, பிரக்யா இருவரும் வெறும் காதலுக்காக மட்டுமே வந்து செல்கின்றனர். ஜீவா வழக்கமான நடிப்பை பதிவு செய்கிறார். மலையாளத்திலிருந்து கொண்டு வந்த சித்திக்கின் கதாபாத்திரமும் முறையாக பயன்படுத்தப்படவில்லை.

படத்தில் நாயகனின் தங்கையை சிலர் காதலிக்கச் சொல்லி தொந்தரவு செய்கின்றனர். அதைத் தட்டிக்கேட்டு சண்டையிடும் நாயகன், இதையேத்தான் நாயகியிடமும் செய்கிறார். நாயகியைத் துரத்தி துரத்தி காதலிக்கச் சொல்லி வற்புறுத்துகிறார். தங்கைக்கு ஒரு நியாயம் மற்ற பெண்களுக்கு ஒரு நியாயமா?. தட்டிக் கேட்க வரும் தந்தையையும் மிரட்டுகிறார். என்ன கொடுமை சார் இது!

அதேபோல படத்தின் தொடக்கத்தில்

தன் தங்கையிடம் "பசங்கள ஏமாத்தாம ஒருத்தன லவ் பண்ணு" எனக் கூறும் நாயகன், இரு நாயகிகளில் ஒருவரைக் காதலித்து மற்றவரை காதலிப்பதாக நடித்து ஏமாற்றச் செய்கிறார். படத்தின் அடிப்படைக் கதையை எடுத்துக்கொண்டால் அந்தக் கதையின் உன்னத நோக்கம் ஒரு பெண்ணை காதலித்து திருமணம் செய்வது. இந்த ஒற்றை கருவை திரைக்கதையாக்கும்போது எந்த வித சுவாரஸ்யமோ, திருப்பமோ இல்லாமல் கடமைக்கு காட்சிகளை அடுக்கியிருப்பது சோர்வு.

"கொழந்தியா குரங்கு மாதிரி இருந்தாலும் நம்ம பசங்க விடமாட்டாங்க" போன்ற முகம் சுழிக்க வைக்கும் வசனங்கள் என மொத்தப் படமும் பெண்ணுடலைப் பண்டமாக்கும் வகையில் பிற்போக்குத்தனத்தின் உச்சமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இடையில் வரும் சென்டிமென்ட் வசனங்கள் சிறு தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் நகர, இடையே திணிக்கப்பட்ட பாடல்களும், சண்டைக்காட்சிகளும், 'லவ் ஃபெயிலியர்' சாங் ஒன்றும் பெரும் சோதனை.

உண்மையில் 90களில் 2000களில்கூட இதே கதைக்களத்தில் ரசிக்கும் காட்சிகளில் படங்கள் வந்துள்ளன. ஆனால், 2022இல் அதாவது பெண்ணுடல் மீதான அத்துமீறல் வன்முறைகள் குறித்துப் பேசும் 'அனல் மேலே பனித்துளி' போன்ற படங்கள் வரும் சூழலில், இதுபோன்ற சினிமாக்கள் பெரும் பின்னடைவே.

ஷான் ரஹ்மான் பின்னணி இசை படத்திற்கு சில காட்சிகள் ஊக்கம் கொடுத்திருக்கிறது. சக்தி சரவணன் ஒளிப்பதிவிற்கு பெரிய அளவில் வேலையில்லை.

மொத்தத்தில் பலவீனமான திரைக்கதை, அழுத்தமில்லாத காட்சிகள், ஆழமில்லாத கதாபாத்திரங்கள், பிற்போக்குத்தனம் என ஒட்டுமொத்த கெடுதல்களையும் தாங்கி வந்திருக்கிறது





# புதிய வாத்து போன்ற டைனோசர் கண்டுபிடிப்பு

அறிவியலாளர்கள் வாத்து போன்ற டைனோசர் ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளனர். அந்த டைனோசரின் பெயர் நேட்டோவெனேட்டர் பாலிடோன்டஸ் (Natovenator polydontus).இதன் பொருள் 'அதிக பல்லுடைய நீச்சல் வேட்டைக்காரன்'. இந்த டைனோசர் சுமார் 71 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகும். இது இரு கால்களை உடைய ஒரு பெரிய வாத்தைவிட கொஞ்சம் பெரியது. இது நீரில் பல காலம் வாழ்திருக்கலாம் என்று அனுமானிக்கின்றனர்.

அறிவியலாளர்கள் தற்போது கண்டறிந்துள்ள வாத்து போன்ற புதிய வகை டைனோசர் இனம் கொண்டுள்ள அதனுடைய நீண்ட இலகுவான உடலமைப்பு, நவீன பென்குயின்போல் நீருக்கடியில் மூழ்கி டைவ் அடித்து, இரை பிடிக்கவும் உதவுகிறது.

**தீரோபோட் வாத்து போன்றது**

இந்தக் கண்டுபிடிப்பு வியாழக்கிழமை, "கம்யூனிகேஷன்ஸ் உயிரியல்" (Communications Biology) பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. இது பறவையல்லாத தீரோபோட் (Theropod) வகையைச் சேர்ந்தது என்றும் மேலும் இரண்டு காலுள்ள மாமிச உண்ணி டைனோசர் போல நீளவாக்கில் உடலமைப்பு உள்ளது என்றும் அறிவியலாளர்கள் தெரிவித்தனர்.

வாத்து போல நீளவாக்கினாலான உடலமைப்பு கொண்டதால் எளிதில் நீரைக் கிழித்துக்கொண்டு , நீருக்கடியில் சென்று எளிதாக உணவைப் பிடித்து இழுத்து வரும் வகையில் உள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

**மங்கோலியாவின் டைனோ**

இதுவரை கிடைத்துள்ள டைனோசர் புதைபடிமங்களில் வாத்து போன்ற புதிய வகை நீளவாக்கினாலான உடல் கிடையாது. இப்போதைய புதிய கண்டுபிடிப்பில், அறிவியலாளர்கள், மங்கோலியாவில் (கிழக்கு ஆசியா) கண்டெடுத்த புதைபடிம விலங்குகளின் எலும்புகளை ஆய்வு செய்தனர். அந்த டைனோசரின் உடலில் பல வடிவமைப்பு அம்சங்களைக் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். இது டைவிங்கிற்கு ஏற்றதாக இருந்தது. அதன் வால் நோக்கி இருக்கும் விலா எலும்புகள் உட்பட அதன் நெறிப்படுத்தப்பட்ட உடல் வடிவத்தைத் தெரிவிக்கிறது.

இன்று காணக்கூடிய வாத்துக்கள் போன்ற நவீன டைவிங்-பறவைகளைப் போன்ற நீண்ட கழுத்தையும் கொண்டிருந்தது. நீண்ட கழுத்து கொண்ட "நேட்டோவெனேட்டர் ஒரு திறமையான நீச்சல் வேட்டையாடும் என்று அதன் உடல் வடிவம் தெரிவிக்கிறது" என்று ஆய்வு கூறுகிறது.

**தாடை ஏராளமான பற்களுடன்**

இப்போது கிடைத்துள்ள டைனோசரின் புதைபடிவ எலும்புகள் விலங்குகளின் தாடையின் அளவுடன் அசாதாரண அளவிலான பற்கள் உள்ளதையும் வெளிப்படுத்தின.

இந்த டைனோசரின் தாடையிலுள்ள ஏராளமான பற்கள், மீன் மற்றும் பூச்சிகளை உணவாகக் உட்கொண்டிருந்ததைக் காட்டுகின்றன. ஆனால் நேட்டோவெனேட்டரின் வயிற்றின் புதைபடிவ எச்சங்களை கண்டுபிடிக்க வேண்டும். அவற்றைக் கண்டறிந்தால், அவை மாமிச உணவை சாப்பிடுமா என்பதும் தெரிந்துவிடும் என்றும் அறிஞர்கள் கூறினர்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781